தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 6—11—1954 | சனிக்கிழமை | இதழ் 19

நறுமலரில் நாற்றம் காணும் 'பட்டர்'

இந்த ஆண்டில் வெளியான தினமணி தீபாவளி மலரில் இராசகோபவாச்சாரியார், "திருக்குறளைப் படி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிருர்.

திருக்குறள் பாட்டுக்களையும், நம்மாழ்வார் பாசுரங்களையும், கீதை சுலோகத்தையும் ஒன்ருக்கிக்காட்டி வள்ளுவரைப் பற்றி தப்புக் கணக்கிட்டு ஆச்சாரியார் திருப்தி அடைந்திருக்கிருர். மேலும் "திருக்குறளைப் படி" என்று சொல்லும் கூட்டம், அறிவற்ற கூட்டம் என்ற கருத்தை அந்தக் கட்டுரையில் ஆச்சாரியார் நரிக் குணத்துடன் புகுத்தியிருக்கிருர்.

சில ஆண்டுகளாக குறள் பிரசாரம் சீர்திருத்தவாதிகளாலும், புதுமைஎழுத்தாளர்களாலும் நாட்டுப் பிரிவினை கோருகிற நல்லறிவாளர்களாலும் தமிழகமெங்கணும் பரப்பப்பட்டுவருகிறது.

ஆச்சாரியாரும், அவர்தம் சிஷ்ய கோடிகளும், விவேக மிழந்த ஊர் பேர் தெரியாத உன் மத்தர்களும் ஆஸ்திகம் என்ற பெயரால், திருக்குறளை மறந்தும், மறுத்தும் இராமாயணப் பிரச்சாரம் செய்து வரு

ஆகவே, ஆச்சாரியாரின் கட்டுரையில் காட்டியிருக்கும் சில பொருந்தாக்கூற்றுக்களை ஆராய்வோம் :

"வள்ளுவர் தாம் கண்ட கடவுளை தியானித்து குறளை எழுதிஞர் ; அது போதும் நமக்கு," என்கிருர் ஆச்சாரியார்.

கடவுளைத் தியானித்து குறள் எழுதிஞராம்-அதுபோதுமாம் ! கடவுள் தியானத்தில் நம்பிக்கை வைத்திருந்தால், "திருக்குறள்" எழுதியிருக்கவேமாட்டார் என்பதை, இந்த அக்ரகாரவாசியார் உணரவில்லை. மேலும், "கடவுள் வாழ்த்துப் பாடல்கள், இயற்றப்பட்டது அல்ல; அது இடைச் செருகல்" என்று வ. உ. சிதம்பரஞர் எழுதியிருக்கிருர்.

இந்நிலையில், வள்ளுவர் பக்தி செய்தார், பூஜை புரிந்தார், தியானம் கொண்டார், கடவுள் வாழ்த்துப் பாடிஞர் என்றெல்லாம் எழுதுவது முழுப் பொய்யே தவிர கடுகளவும் உண்மையே இல்லை.

"திருவள்ளுவரும்-நம்மாழ்வாரும் ஒன்ருகப் பேசிக் கோண்டே பாடிஞர்கள் போலத் தோன்றுகின்றது" கொள்ளவேண்டுமே யல்லாது, ஒன்றுபடுத்தி எழுதுவது என்பது ஒரு பெரும் தப்பு.

நேற்று முளைத்த நம்மாழ்வார் எங்கே ? முப்பால் பாடிய திருவள்ளுவர் எங்கே ?

"குறளில் தேய்வம் மட்டுமல்ல சீரார்த்தம் சேய்வதுகூட நல்லது என்று சோல்லப்பட்டிருக்கிறது, என்கிருர் இந்தப் பார்ப்பனீய பாதுகாவலர்.

வள்ளுவர், தான் எழுதிய குறளுக்கு உரை எழுதி வைக்காத காரணத்தால் புராணப் பித்தர்கள் அனைவரும் அவரவர்கள் கருத்துக்கு ஏற்றதை எப்படியோ எழுதிவிட்டார்கள் ; காரணம் உலகம் உருண்டை என்பதை அவர்கள் அப்போழுது தேரிந்திருக்கவில்லை ; "அறம்" என்று வள்ளுவர் கூறியது, மனு நூல்களில் எழுதப்பட்டிருக்கும் நீதி முறையைத்தான் என்று பரிமேலழகர் அப்பொழுது எழுதிஞர். இப்பொழுது ஆச்சாரியார், குறளுக்கு வருணஸ்ரம முறையை ஏற்படுத்துகிருர்.

மழித்தலும்நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின், என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிட்டார் ?

உண்மையிலேயே, ஆச்சாரியார் எழுதும் எதுவும் சக்ரவர்த்தி திருமகன்களாக, முன்னுக்குப் பின் முரணுகவேயுள்ளன. திருக்குறள் கடவுள் கொள்கையை முழுக்க முழுக்க ஆதரிக்கும் நூலானுல், ஆச்சாரியார் எங்கு போனுலும்இராமாயணப்பிரசங்கம் புரிகிருரே ஏன் ? குறள் நெறியல்லவா பேச வேண்டும் ?

பரதனின் பண்பு, ஜனக மன்னனின் சீலம், தசரதனின் தவம், சிதையின் கற்பு, பற்றி சக்ரவர்த்தி திருமகன் எழுதும் ஆச்சாரியார் ஏன் குறள் நெறி எழுதவில்லை ?

இங்கேதான் சூட்சுமம் உள்ளது. ஆரிய தருமத்திற்கு ஆதரவு தேடத்தான், ஆச்சாரியார் எதையும் பேசுவார் ; எழுதுவார்.

மொத்தத்தில் ஆச்சாரியாருக்கு வயிற்றெரிச்சல்! ஏன்? குறள் நெறி நாடெங்கும் பேசப்படுகிறது. கிமாயணம் நடிக்கப் பெறுகிறது. ஆரிய தருமம், மனு நூல் கருத்துக்கள் கரைந்து கொண்டிருக்கின்றன. ஆஸ்திகம் பேசுவோர் வீதி

மிச்சமிருந்தது ஒன்று ; அதையும் தோடுகிறது 'சாணக்கியம்'!

கிருர்கள். மொத்தத்தில், மதவாதிகளும், சாதி வெறியர்களும், ஆஸ்திகம் பேசும் அனுமதேயங்களும் குறளை விரும்பிப் படிப்பதில்லை.

இந்நிலையில் தமிழகமெங்கணும் குறள் பிரச்சாரம் மிக வேகமாகப் பரவிவருகிறது; குறள் நெறி விழாக்கள், குறள் வகுப்புகள், நாள்தோறும் நடைபெறுகின்றன. குறளுக்கு புது உரைகள், நல்ல விளக்கங்கள், விரிவுரைகள் தினம் தினம் வளருகின்றன.

இந்த நல்ல நிலையை ஆச்சாரியார் கண்டார் ; (காணுகிருர்) அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை—எனவேதான் மடமைக் கருத்துள்ள நூல்களுடன், குறளை ஒப்பிட்டுக் காண்பதில் திருப்தி அடைந்திருக்கிருர். மெய் யெழுதா தினமணியில் இந்த குல்லுகபட்டர் பொய் எழுதியிருக்கிருர்.

என்கிருர் இந்தப் பழமை சனுதனியார்.

வைஷ்ணவ சித்தாந்தத்தின் வளர்ச்சிக்கு, கண்ண பரமாத்மா என்ற கயவனின் பெருமைக்கு பாசுரம் பாடிஞர் நம்மாழ்வார்.

நாடு, மக்கள், அரசு முறை, இல்வாழ்க்கை, ஒழுக்கம், கல்வி, நட்பு, காதல், ஆகிய ஒவ்வொன்றையும்பற்றி சிந்தித்து, தெரிந்து குறள் எழுதிஞர் வள்ளுவர்.

திருவள்ளுவர், மக்களுக்காக நாட்டிற்காக பாட்டுகளை எழுதிஞர்; எந்த நாளிற்கும் பொருந்தும் முறையில்.

நம்மாழ்வாரோ, மடமை வளர்க்கும் பூசுரக் கூட்டம், ஆஸ்திகம் பேசும் அறிவுக் குருடர்கள் ஆகியோர் வாழ பாடல்கள் புனைந்தார்.

திருவள்ளுவரையும், நம்மாழ்வாரையும் இரு துருவங்களாகக் என்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும், கல்லார் அறிவில்லாதார் என்றும், அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை, பொருத்தாளுெடு ஊர்ந்தான் இடை, என்றும் செயற்பால தோறும் அறனே ஒருவற்கு, உயற் பாலதோரும் பழி என்றும் பகுத்தறிவு கீதம் இசைத்த வள்ளுவர், உயர்சாதி தத்துவத்திற்கு உறுதி தருகிற சிரார்த்தத்தை எப்படி ஏற்றுக்கோண்டாரோ ? நாம் அறியோம்.

"அறவாழி அந்தணர் என்பது கடவுள். அறவாழி அந்தணர் தாள் சேர்ந்தாருக்கு அல்லால் பிறவாழி நீந்தலரிது", என்கிருர் ஆச்சாரியார்.

அறவாழி அந்தணர் என்பது கடவுளானுல், அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான், யில் சென்ருல் மக்கள் கைகொட்டி சிரிக்கும் அளவிற்கு கீழே சென்று விட்டது வேதாந்தம்.

இந்த நேரத்தில் ஆச்சாரியார் புறப்பட்டிருக்கிருர், ஆஸ்திகத்தைக் காப்பாற்ற ! யோர்க் கோலத்தோடு அல்ல; முப்புரி நூலையும் முனிவரின் மந்திரங்களையும் நம்பிக்கொண்டு ! திருக்குறளையும், வேதாந்த நூல்களின் பட்டியலில் சேர்க்கிருர். இதில் ஆச்சாரியார் நிச்சயம் வெற்றிபெற மாட்டார். வெற்றி பெற முடியாது.

ஏன் ? திருக்குறள் தனி நூல்.

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற
நன்குணர்ந்தோர்கள் உள்ளு
வரோ மனுவாதி
ஒரு குலத்துக் கொரு நீதி.
—பேராசிரியர், சுந்தரம் பிள்ளை

மு. ந. தருமலிங்கம்.

கீழ்ப்பாக்கத் தோடர்பிருப்பதால் சிந்தையில் எதாவது....?

சிவஞானமும் 'தமிழன் தாலி'யும் 2

—கண்ணதாசன்—

ஒரு திருத்தம்

கடந்த, 30-10-54உ தென்றலில், 'சிவஞானமும் தமிழன் தாலி'யும், என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையின் தொடர்ச்சியில் (தென்றல் 8-ம் பக்கம்) 32-வது வரியில் கீழ்க்கண்டவாறு உள்ளது :

"...இதை வாதத்துக்காக சரி என்று வைத்துக் கொண்டாலும், வெறும் 'ஈகையரிய' என்றுலே, கொடுத்தற்கரியது என்னும் பொருள் வந்துவிடும்"

இப்படி யிருக்கும் வரியைக் கீழ்க்கண்டவாறு திருத்திக்கொள்ளவும் :

"...இதை வாதத்துக்காக சரி என்று வைத்துக் கொண்டாலும், வெறும் 'இழையணி' என்றுலே, கொடுத்தற்கரியது என்னும் பொருள் வந்துவிடும்"

—அதிலேயே 46-வது வரியில்,

"அதிலும் இளங்கோவடிகள் போன்ற ஒரு சிறந்த புலவர் இந்தக் குற்றத்துக்கு ஆட்படமாட்டார்"

என்றிருப்பதை

"அதிலும் புறம்பாடியவர்களில் ஒரு சிறந்த புலவர் இந்தக் குற்றத்திற்கு ஆட்படமாட்டார்"

என்று திருத்திக் கொள்ளவும்.

[சென்ற இதழிலே, சிலப்பதிகாரம் முற்றிலும் 'தாலி'ப்பேச்சே கிடையாது என்பதுபற்றியும், புறநானூற்றிலும் தாலி, 'தாலி'யாகவே வரவில்லை என்பதுபற்றியும் கூறியிருந்தோம்.

புறநானூற்றுப் பாடல் (127) கூறும், 'ஈகையரிய இழையணி' என்பதற்கு உரையாசிரியர் இருவர் (உ. வே. சாமிநாதையர், ஔவை சு. துரைசாமி பிள்ளை) 'மாங்கல்ய சூத்திரம்' என்றே பொருள் கூறியுள்ளனர். இந்த உரைகளில் ஒன்றைத்தான் தோழர் சிவஞானம் தன் முடிவுக்கு ஆதாரமாக்கியுள்ளார். இந்த உரையாசிரியர்கள் புறநானூற்றுப் பாடல் தாலியைத் தான் குறிக்கிறது என வலிந்து பொருள் கொண்டுள்ளனர். அதாவது, "கொடுத்ததற்கரிய இழையணி என்று வருவதால் அது தாலியாகத்தான் இருக்க முடியும்" என்று யூகித்துப் பொருள் கூறியுள்ளனர். ஆமாம்; வெறும் யூகத்தையே இவர்கள் உரையாக்கிமுடிவு கட்டியுள்ளனர். மறுக்க முடியாத உரையாக அதைக் கொள்ள நியாயமே இல்லை. கொடுத்தற்கரியது தாலி மட்டும் தான் என்பது என்ன முடிவோ தெரியவில்லை! (மங்கையர் தம் இடையணியாம் 'மேகலை' கூட ஈகையரியதுதான்!)' ஈகையரிய இழையணி' என்பதற்கு, 'கற்பு' என்று பொருள் கொள்கிறார் மற்றொரு புலவர். இது சரியாக இருக்கமுடியும். சிவஞானம் விரும்புவதாகச் சொல்லிக்கொள்ளும் 'தமிழன் பண்பா'ட்டுக்கு அது மிகவும் பொருந்த முடியும். அத்தனையும் பாடல் வல்ல பாணருக்குக் கொடுத்த பின், ஈகையறிய கற்பினொடுங் கூடிய மாதரோடு, ஆய் கோயில் இருந்ததெனவும் கொள்ள முடியும். சென்ற இதழில் நான் கூறியது போல, 'விலையுயர்ந்த ஆபரணங்கள்' என்றோ, 'கற்பு' என்றோ கொள்ளல் சாலும். '**ஏணிச்சேரி முடமோசியாரே** பாடியதாக உள்ள அந்தப் பாடலில், '**களிறு அனைத்தையும் கொடுத்த பின்**' என்று வருகிறதே தவிர, நகைகள்-அணிகள் பற்றிய பேச்சே இல்லை. அப்படியிருந்தாற்ருன், "மற்ற நகைகளை-அணிகளை ஈந்து, ஈகையறிய இழையணியோடிருந்த மாதர்" என்று கொள்ள முடியும், அப்போது, மற்ற நகைகளிலிருந்து இதற்கு தனி மதிப்பு ஏற்படுவதால் இது தாலியாக இருக்கலாம்என்கிற யூகம் புலப்படும். இப்போது, பாடல் காட்டும் முடிவு, அது 'தாலி' என்பதற்குச் சிறிதுகூட உதவவில்லை. ஔவைப் பிள்ளை, சாமிநாதையரின் முறையிலேயே அப்பொருளைக் கூறியுள்ளார். இதனைப் பொருந்தா உரை என சுலபமாகக் கூறி விடலாம்.

புறம் 374-வது பாடலில் 'தாலி' என்கிற பதத்தை உபயோகித்திருக்கும் **முடமோசியார்**, (குறச்சிறுவர்க்கு அணியப்படும் தாலி) நமக்குத், 'தாலி' அன்றையத் தமிழகத்தில் எந்த நோக்கத்தோடு இருந்தது என்பதை அறிய வசதி தந்துள்ளார்.

முடிவாக, சங்ககால இலக்கியங்களைக் கொண்டு, தாலி இருந்தது என்பதற்கு ஆதாரம் தேடுகிறவர்கள், இழையணி, மங்கல அணி, மண்ணுங்கட்டி அணி தெருப்புழுதி அணி என்றெல்லாம் வார்த்தைகளைக்கண்டு தாலி என்று மயங்குகிருர்களே தவிர, அசல் 'தாலி' எனும் பதம் தனித்தமிழ்ப் பதமாக இருந்தும், அது நேரடியாக ஒரு இடத்தில் கூட 'தாலி' என்றே வரவில்லை. அதாவது திருமணத்தில் கட்டப்படும் புனிதப் பொருளில்!

★

ஆகவே, சுலபத்தில் சங்ககாலத்தில் தாலி கட்டப்படும் பழக்கம் இல்லையெனும் முடிவுக்கு வரலாம். அது தமிழ் வழக்கம் அல்ல என்பதுதான் உண்மையாகவும் இருக்க முடியும்.

பிறகு ஒரு 'பெரிய' ஆதாரத்தைத் தோழர் சிவஞானம் காட்டுகிருர். அதாவது கம்பன் தாலி பற்றிக் குறிப்பிட்டிருப்பதாகக் கூறுகிருர். இதை ஒப்புக்கொள்ள நமக்குத் தடை இல்லை! கம்பன் காலம் மிகவும் பிற்பட்ட காலம்! அதாவது 12-ம் நூற்றுண்டு-சுமார் எழு நூறு ஆண்டுகட்கு முன்புதான் கம்பன் வாழ்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்! அந்த நாளில் தாலி கட்டும் வழக்கம் புகுத்தப்பட்டிருக்கலாம். ஆரியம், நோயில் கோயிலாக உருவான காலம் கம்பன் காலம். 'தாலி' பற்றிக் கம்பன் கூறியதாகக் கூறுவது, "முந்தா நாள் முத்தையசெட்டி வீட்டில் தாலி கட்டினார்கள்" என்று ஆதாரம் காட்டுவது போலாகும்! "சங்க காலத்தில் உண்டா?" என்று கேள்வி, "இல்லை" என்கிற பதிலோடு முடிகிறது.

★

சில்லறைப் புலவர்

கண்ணதாசன்

மொத்தமாகக் காப்பியம் பாடிய புலவர்கள் போக, சில்லறைப் பாடல்கள் மட்டும் பாடிய சில புலவர்களும் தமிழ் நாட்டில் வாழ்ந்தார்கள். காப்பியம் பாடிய புலவர்கள் சிலரும் சில்லறைப் பாடல்கள் பாடினார்கள். அப்படிப் பாடப்பட்ட சில்லறைப் பாடல்கள் பலவற்றில் ஔவையார் பாடியதாகக் காணப்படும் பாடல்கள் சில உண்டு. இது ஒரே ஔவையார் பாடியதல்ல என்றும் பல ஔவையார்கள் பாடியவை என்றும் புலவர் பலரும் முடிவு கட்டுகிருர்கள். வெள்ளைக்காரன் வந்ததற்குப் பிறகும் ஒரு ஔவையார் இருந்ததாக, ரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பிடுகிருர்! அதற்கு உதாரணமாக 'கான மயிலாட கண்டிருந்த வான் கோழி' என்ற பாடலைக் காட்டும் சேதுப்பிள்ளை, "வான்கோழி என்பது வெள்ளைக்காரர் கொண்டு வந்தது" என்றும், "மேற்படி பாடல் ஔவையாரின் மூதுரையில் காணப்படுவதால், வெள்ளையர் வந்ததற் பின்னும் ஒரு ஔவையார் இருந்திருக்கவேண்டும்" என்றும் கூறுகிருர். முடிவாக, "மூன்று ஔவையார்கள்" என்று முடிக்கிருர். பல புலவர்களும் இதையேதான் கூறுகிருர்கள். சொல்லப் போனால், உண்மையும் அதுதான்.

ஆனால், எதையும் புரிந்துகொள்ளாத தோழர் சிவஞானம், இதிலும் பெருந் தவறு செய்கிருர்! ஒரே ஒரு ஔவையார்-சங்க கால ஔவையார்-என்று கையில் தூக்கி வைத்துக்கொண்டு வெண்டைக்காய் ஆராய்ச்சி செய்கிருர். அதோடு, ஔவையார் பாடலுக்கும் விநோத வியாக்கியானம் கூறுகிருர். 'ஔவையார்' படம் பிடித்தவர்க்கு அடுத்த சிறந்த ஆராய்ச்சியாளராக இவரைக் கொள்ளலாம்! நிற்க.

ஏதோ ஒரு ஔவையார் பாடியதாக, 'தனிப்பாடற் றிரட்டு' என்னும் நூலில் காணப்படுகிறது கீழ்க்கண்ட பாடல் :

நூலெனிலோ கோல் சாயும் ; நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியும் ஆவான் ; வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு !

இந்தப் பாடலுக்குப் பொருள் எழுதிய, திரு கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம். எல். அவர்கள், முதல் வரிக்குப் பொருள் கூறும்போது, (நூலெனிலோ கோல் சாயும் என்பதற்கு) "பூணூல் அணிந்த பார்ப்பனன் அமைச்சனானால் நீதி முறை மாறும்" என்று கூறுகிருர். எல்லாப் புலவர்களும் கூறும் சரியான பொருள் அதுதான். ஆனால் தோழர் சிவஞானம், பார்ப்பனர்களுடைய பரிவைப் பெற விரும்பி, பொருத்தமற்ற—பைத்தியக்காரத்தனம் என்று சொல்லதக்க பொருள் கூறுகிருர். அதாவது, "நூலறிவு, அதாவது, சரித்திரம் படித்த சமயவாதிகள் மந்திரியானால் செங்கோல் பிறழும்" என்கிருர்! ஐயோ பரிதாபமே! எவ்வளவு கஷ்டப்பட்டு, பொருந்தாத பொருள் கண்டு பிடிக்கிருர், பாருங்கள்! இந்தக் கோமாளித்தனமான பொருள்கண்டு பிடிக்க இப்பொழுது என்ன அவசியம் வந்ததோ புரியவில்லை!

சிறப்புச் சொற்பொழிவு

7-11-54 ஞாயிறு காலை 10மணிக்கு
லட்சுமி தியேட்டர்
(பெரம்பூர் பாரக்ஸ்)

தலைவர் :
T. வேணுகோபால் ராவ்
(உதவி மேயர்)

பேச்சாளர்கள் :

அறிஞர் [illegible]
பொருள் : 'அச்சம்'

புலவர் A. K. வேலன்
பொருள் : 'உலகத்தில் நாம்'

காஞ்சி கல்யாணசுந்தரம்
பொருள் 'மனிதனும், சமுதாயமும்'

இன்னிசை : ஜி- கஸ்தூரி.
நுழைவு க்கட்டணம் அணு 4.
எழும்பூர் அறிவு வளர்ச்சிமன்றம்.

இலக்கியத்தில் காதல்

காமத்துப்பால் 3.

நல்ல நிலவு திக்கெட்டும் தென்றல் வந்து பாய்கிறது, 'சில்' லென்று பாயும் அந்தத் தென்றல், மனித மனத்தின் உணர்ச்சிகளை உரம்பெறச் செய்கிறது. இரவு நேரம்; ஆகவே, பல்வகை உணர்ச்சிகளில் ஒரே உணர்ச்சியே தலை தூக்கி நிற்கிறது.

இதோ; இவன் அழகான கட்டிளங்காளை!

இதோ; இவள் அவன் காதலி; இணையற்ற அழகி!

முற்றத்திலே நிலவு வீச, மஞ்சத்தின் மீது அமர்ந்திருக்கும் அவன் மடியில் இவள் படுத்திருக்கிறாள். அகள்முகத்தை மெல்ல அவன் திருப்பி, கூர்ந்து கவனிக்கிறான். ''பாதாதிகேசபரியந்தம்'' கண்ணோட்டம் செலுத்துகிறான். ஆகா! பளிங்குச்சிலை மேனி; பவளமல்லிப் பாதம்; காதலர்புரியின் வாழைத் தம்பலமெனும் தொடைகள்; ஆல் போலும் வயிறு; சங்குபோலும் கழுத்து; மாங்கனியை வகிர்ந்து தேன்பூசி வைத்தது போல் கன்னங்கள்; உலக இன்பத்தின் சாரத்தை இரு சிறு பிரிவுகளாக்கி செவ்வர்ணம் பூசியது போல் உதடுகள்; ''கொல்லும் வாளையும் வேலையும் இவை வெல்லும்! வெல்லும்!'' என்று சொல்லத்தக்க விழிகளே; கூன் பிறை நெற்றி; கரு நாகப் பின்னல் - ஐயோ! இந்த அழகுக்கு ஈடு வேறெந்த அழகுமில்லை! அதனை அவன் **கண்டான்! கண்டான்!**

அவள் தன் செங்கனிவாய் திறந்து சிரித்தாள்; சிரிப்போடு சில முத்துக்களை உதிர்த்தாள்.

''அத்தான்''

''உம்......''

''ஏன் அத்தான், சும்மா பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்?''

''உம்......''

''பதில் செல்லுங்கள், அத்தான்!''

''உம்......''

''என்ன ஒரேயடியாக உம்... உம்...என்கிறீர்கள்? என்மேனியில் அப்படி என்ன கண்டீர்கள்? பேச முடியவில்லையா? பார்த்த விழி பார்த்தபடி வார்த்த சிலையாகி விட்டீர்களே; அத்தான்! அதோ நிலவைப் பாருங்கள்' அது நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது! (ஐயோப் பாவம் இது மாதிரி எல்லாக் காதலர்களுமே சொல்கிறார்கள்!) நம்மைக் கண்டதும் ஓடி ஒளிந்துக் கொள்கிறது! (கால் முளைத்து விட்டதோ!) நட்சத்திரங்கள் கண் சிமிட்டுகின்றண! (நட்சத்திரமே சிமிட்டுகின்றது! கண் மட்டும் சிமிட்டுகிறதாம்) இங்கு படர்ந்திருக்கும் கொடியைப் பாருங்கள்; அது தலை குனிந்து நம்மை வரவேற்கிறது. (அது ராஜாங்கத்தில் ஊழியம் பார்த்த கொடி!) அத்தான் இருவராக இருக்கும்போது எவ்வளவு இன்பமாக இருக்கிறது தெரியுமா!''

'இப்படி அவள் பேசிக் கொண்டே இருந்தாள், அவன் தெவிட்டாமல் **கேட்டான்! கேட்டான்**

அவள்பேசிய - இல்லை; பிழிந்து தந்த - இல்லை, தாக்கிய - வார்த்தைகள் அவன் உணர்ச்சிகளைத் தூண்டி, மெய்மறக்கச் செய்து விட்டன. அப்படியே தலை குனிந்து, தன் உதடுகளால் **உண்டான்! உண்டான்!**

அப்படியே முகம் முழுவதிலும் தன் முகத்தைத் வைத்தான். நாசித் துவாரங்கள் வழியே கம்பீரமான-மயக்கம் கலர்ந்த ஒரு மணம்-இளம் பெண்களுக்கு இயற்கையாக அமைந்தமணம் புகுந்தது! அடாடா! என்ன மணம்! என்ன மணம்! அவன் மீண்டும் மீண்டும் **முகர்ந்தான்' முகர்ந்தான்!**

இனிப் பொறுப்பதில்லை! கண்ணே வா, காண்போம் இன்பத்தின் எல்லை!

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி இருவர் எனுந் தோற்றம் இன்றி... ...சொல்லித் 'தெரிவதுண்டோ மன் மதக்கலை.........சாரையோடு சர்ப்பம் சருவி இருந்தது போல்.....கூடி முயங்கப் பெறின்......இப்படி யெல்லாம் சொல்லப்பட்ட இன்பத்தைக் கண்டான்; **பயின்று அறிந்தான்! பயின்று அறிந்தான்!**

உடனே கூவினான்;

''ஆகா! **உள! உள!**''

''என்னடா தம்பி 'உள'?''

''உள! உள!''

''அடெ எங்கே உள?''

''ஒண்டொடி கண்ணே உள''

''ஒண்டொடி கண்னே என்ன உள?''

''கண்டு கேட்டுண்டு யிர்த்துற்ற ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள!''

ஐம்புலனுக்கும் சுவை தருவது ஒண்டோடி கண்ணேதான் உளது; **வள்ளுவன்** தெளிவாக - ஏழே வார்த்தைகளில் அதைச் சொல்லி முடித்து விட்டான். **அம்பிகாபதி**யும் தான் பாடிய **கோவை**யில்; பாங்கற்கூட்டம் என்னும் பகுதியில் (26வது பாடல்) அதையே கூறுகிறான்; வேறு பாணியில்;

''மெய்வாய் கண் மூக்கு செவி எனுப் நாமங்கள் மேவப்பெற்ற ஐவாயினும் நின்றருந்தினரோ... ...''

— இது அம்பிகாபதி கூற்று.

சகல சுவைகளும் பொருந்திய 'சாரத்திரள், பெண்தான்-காதலின் தான் என்பதை இதற்குமேல் - வள்ளுவனுக்குமேல் - எப்படிச் சொல்ல முடியும்! அதைத் தழுவியதுதான் அம்பிகாபதி பாடல்! ''மது வேண்டுமா? மாது வேண்டுமா'' என்று கேட்டால் 'சட்'டென்று வாலிபர்கள் ''மாதுதான் வேண்டும்'' என்று சொல்வார்கள். பலவீனர்கள் மட்டுமே மதுவேண்டுமென்பார்கள். வள்ளுவன், பெரும்பான்மையான எண்ணத்தையும் உண்மையையும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றான்.

''அட மனிதனே; மது, உண்டால்மட்டும்தானடா மகிழ்வு தரும்; நினைத்த உடனே மயிர்க்கூச் செரிதலும், கண்ட உடனே மயக்கம் போடுதலும் அதிலே இல்லையடா; பெண்ணிடம் தானடா, அது பூரணம் பெற்றுக் காணப்படுகிறது.

''உள்ளக்களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில் காமத்துக் குண்டு!''

மனோதத்துவம் தெரியாவிட்டால்' வள்ளுவன், இந்த வரிகளைப் பாடியிருக்கவே முடியாது! வாலிப வயதிலே, வள்ளுவன் சிறந்த காதலனாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

'ஏற்றுக்கொள்ளக் கூடாது'

என்ற கருத்தினை ஆதரித்து எழுதியிருக்கும் தோழர்கள்.

1. ம்ா. சு. முத்துக்குட்டி
   முக்கூடல்
2. அன்புமணி
   சென்னை. 1
3. மே. எ. கோதண்டராமன்
   மேட்டுப்பாளையம்.
4. எம். மாசிலாமணி
   பெங்களூர்.
5. மா. சௌந்திரபாண்யன்
   சமயநல்லூர்.
6. சங்கரநாராயணன்
   மதுரை.
7. இரா. பாலகிருஷ்ணன்
   அரியலூர்.
8. டி. கிருஷ்ணசாமி
   தஞ்சை.
9. தா. மு. சண்முகம்
   கோயமுத்தூர்.
10. எம். பழனிசாமி
    திருச்சி.
11. அ. தங்கமணியன்
    ம்துரை.
12. சு. நாராயணசாமி
    இராமநாதபுரம்.
13. அசோகன்
    ஆரணி.
14. க. இராசப்பன்
    கரூர்.
15. ஜி. கணேசன்
    காரைக்குடி..
16. எம். எம். நடராசன்
    பொன்னமராவதி.
17. ஆ. கல்யாணசுந்தரம்
    சென்னை. 1
18. எஸ். இராமன்
    திருச்சி.
19. மு. கோ. பாண்டியன்
    மதுரை.
20. சி. சுப்பையன்
    பாலக்காடு.
21. கே. மாடாசாமி
    நாகர்கோவில்.
22. சி. கோவிந்தசாமி
    வேலூர்.
23. ஈ. நாகையா
    கோயமுத்தூர்.
24. கா. பா. ராசாபாதர்
    சென்னை 3.
25. சு. இலக்குவன் எம். ஏ.
    திருவாங்கூர்.
26. பெ. கோ. தங்கப்பா
    இலங்கை.
27. தனபாலன்
    சென்னை 13.
28. மீரா. அனிபா
    ஏர்வாடி நெல்லை.
29. சி. ஆதிமூலம்
    சென்னை 5
30. காதர்
    திருச்சி.
31. தா. கிருஷ்ணமூர்த்தி
    சங்கரநய்னூர் கோவில்.

★

27-10-54 புதன் அன்று உடுமலை வட்டம், மடத்துக்குளம் தி.மு.க. தோழர் ஆ. நாட்டராயன் அவர்களுக்கும் தோழியர் சி. மனோன்மணி அவர்களுக்கும் ஆனைமலை ஆவணப் பதிவாளர் முன்பு பதிவுத் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

விரைவில் எதிர்பாருங்கள்!

திரை

[வெள்ளித்திரை ஏடு]

பெரிய அளவில் ஏராளமான பக்கங்களுடன்!

திங்கள் ஒருமுறை - தித்திக்கும் 'திரை'!

பிரமிப்புத்தரும் அளவு படங்கள்!

இதுவரை இப்படியொரு பத்திரிகைவந்ததில்லை!

தனி இதழ் அணா 4.

பிரதியொன்றுக்கு 8 அணா வீதம் டெபாசிட்கட்டக்கூடிய நாணயமான ஏஜண்டுகள்

எழுதுக:

நிர்வாகி: திரை

13, நல்லண்ண முதலி சந்து,

சென்னை-**14.**

இது ஒரு 'தென்றல்' வெளியீடு

எண்ணம்

கண்ணதாசன்

‘பிரெஞ்சிந்தியா’வுக்கு விடுதலை கிடைத்து விட்டது! இதைக் கேட்டும் மகிழாமலிருப்பவர்கள், ‘மக்களுட் பதர்’ என எண்ணத்தக்கவர்களே! நமக்கு அளவுகடந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது, விடுதலைச் செய்தி கேட்டு! ஆனால்...? ‘முழுவிடுதலை’ என்று இதைச் சொல்ல முடியுமா? முடியாது! ஒரு விலங்கு உடைபட்டிருக்கிறது! அவ்வளவுதான்! இது பற்றி ‘பிரெஞ்சிந்திய’ விடுதலைப் போரில் பெரும்பங்கு கொண்ட, புதுவை தி. மு. கழகம் வெளியிட்டுள்ள எண்ணத்தை, நம்முடைய எண்ணமாக அப்படியே பிரதிபலிக்கிறோம்! கீழ்க்கண்ட செய்தி புதுவை தி. மு. கழகம் வெளியிட்டுள்ளதாகும்.

சுமார் 250 ஆண்டுகளாக இங்கு நிலைபெற்றுவந்த பிரஞ்சு ஏகாதிபத்தியம், இன்று நம்மை விட்டு அகல்கின்றது! நமது இலட்சியத்தின் குறுக்கே நின்ற ஒரு பெருந் தொல்லை இன்றோடு நீங்குகிறது! அதற்காக, நாம் நமதுமகிழ்ச்சியை அறிவித்துக் கொள்ளுவோமாக!

பிரஞ்சுக்காரர்களை நாம் வெறுக்கவில்லை; அவர்கள் நம்மை ஆளுவதையே வெறுத்தோம்! அவர்கள் நட்பை நாம் புறக்கணிக்கவில்லை; அவர்கள் ஆண்டான்! - நாம் அடிமை! இது நம் இனத்துக்கே - நாட்டுக்கே இழிவைத் தருவதாகும். இந்த இழிநிலை, இந்திய அரசினர் முயற்சியாலும், திரு. மெண்டே பிரான்ஸ் அவர்களின் நல்லெண்ணத்தாலும் நீங்கியது கண்டு, நாம் அவர்களைப் பாராட்டுகின்றோம்! அதே போது இணைப்புக்கிளர்ச்சி நடைபெறுங்கால், அக்கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கஷ்ட நஷ்டங்களேற்ற திராவிட இயக்கத் தோழர்களையும் பாராட்டுகின்றோம்!

இணைப்புக்கிளர்ச்சி வீண் விபரீத நிலையை அடையவொட்டாமல், தம் அறிவின் திறத்தால், பிரஞ்சு நாட்டின் பெருமைக்கு மாசு நேராவண்ணம், நேரிய முறையில் சிக்கலைத் தீர்த்து வைத்த பெருமை, பிரஞ்சு நாட்டு முதன்மந்திரி திரு. மெண்டே பிரான்ஸ் அவர்களையே சாரும். இதனால் அவர், இவ்விருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுச் சுவடியில், ஓர் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டார்! அவர் உயரிய நோக்கம் என்றும் நிலைபெற்று வாழ்வதாக!

இதுவரை, பிரஞ்சி ஆட்சியால் நாம் அடைந்த நன்மைகள் பல! தீமைகளும் பல!

முக்கியமாகக் கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில், நாம் அடைந்த நன்மை அளவிடற்பாலதன்று! பிரிட்டனால் இந்தியா அடைந்த நன்மையைவிடப் பல நூறுமடங்கு நாம் அதிகமாகவே பெற்றுள்ளோம். அதுபோன்றே, அக்ரமத்திற் கடிபணியும் நிலை, உரிமையற்ற நிலை, கோழைத்தனம் ஆகியவை, பிரஞ்சு ஆட்சியால் நாம் பெற்ற பெருந்தீமைகளாகும்!

ஒழுங்கான சட்ட முறைகளைக் கொண்டிருந்தும், பிரஞ்சு ஆட்சி, இத்தகைய தீமைக் குணங்களையும்வளர்த்துத்தான் வந்திருக்கிறது. காரணம் தன்னிடம் விசுவாசமுள்ளவர்களையே ஆட்சிக்கு வர வாய்ப்பளித்ததும், அப்படி ஆட்சிக்கு வந்தவர்கள் அரசாங்கச் சலுகை காரணமாகப் பொது மக்களிடம் முறைகேடாக-கொடுமையாக நடந்துகொண்டாலும், அவர்களை ஏனென்று கேளாமல் அவர்கள் போக்குக்குத் துணைநின்றுவந்ததுமேயாகும்! அநீதிக்கும் கொடுமைக்கும் ஆளான பொதுமக்கள் ஒரு சமயம் ஏன்? என்று கேட்க முனைந்தால், அவர்கள் ஆளவந்தார்களின் ‘ஏவல்’களுக்கு ஆளாவது ஒருபுறமிருக்க, அரசாங்கச் சட்டமும் அவர்களுக்குத் துணைநின்று நம்மையே திருப்பிக் கொட்டும்! சிறையின் விருந்துக்கு அழைக்கும்! இவை போன்ற காரணங்களால்தான், சிங்கத்தமிழர் வழிவந்தோர் சிறுநரியாயினர்! கொடுமைகளை எதிர்த்தோர் கோழைகளாயினர்! உரிமைக்குப் போராடியோர் ஊமையராயினர்! இந்தக் கொடிய நிலை மறைகிறதென்றால், நமக்குக் குதூகலம் ஏற்படுவது இயல்புதானே!

ஆனால்...?

பிரஞ்சு ஆட்சி நீங்கிற்று! இந்தியாவோடு இணைக்கப்பட்டோம்! இதனால், நம் அடிமை நிலை முற்றும் தீர்ந்துவிட்டதா?

நம் கைகளைப் பிணைத்திருந்த இரும்பு விலங்கு தகர்க்கப்பட்டது! பதிலுக்குப் பொன் விலங்கு பூட்டப்படுகிறது இன்று! இவ்விலங்கு, பொன்னால் (இந்திய ஆட்சியாக) இருப்பது கண்டு பலர் பூரிப்படையலாம்; மகிழ்ச்சியுறலாம்! ஆனால், நம் உரிமைக்கரங்களைப் பிணைத்திருப்பது பொன் விலங்கேயாயினும், அதனை உடைத்தெறிய வேண்டிய கடமை நமக்குண்டு என்பதை நாம் மறந்துவிடவில்லை.

சட்டப்பூர்வமான மாற்றத்துக்குப்பின், புதுவை முதலிய பகுதிகளை சென்னை இராச்சியத்தோடு இணைக்கப்படும். அதன்பிறகுதான், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் இங்குள்ளோர்களுக்குப் புலனாகும்! பிரஞ்சு ஆட்சியில் நடைபெற்ற தீமைகளைத் தோற்கடிக்கும் வகையில் மக்கள் நடத்தப்படப்போவதும் விளங்கும்!

இன்று சென்னை மாகாண மக்கள், வடநாட்டின் கூட்டுறவால் அனுபவித்து வரும் தொல்லைகள் மிகப்பலவாகும். தன் முக்கிய வருவாயை டில்

(9-ம் பக்கம் பார்க்க)

என் இதயத்தின் மூலையிலே ஒரு ராகம் இருக்கிறது. நீ அருகிலே இருக்கும்போது, அந்த இதயத்திலேயிருந்து நான் என்ன கேட்கிறேனோ, அதை நீயும் கேட்கிறாயா? அதே இதயத்தில் ஒரு முரசு இருக்கிறது. அது உன்னைக் கண்டவுடனே படபடவென்று அடித்துக்கொள்கிறது; ‘டக்டக்’ கென்று சப்திக்கிறது!

என் பாட்டு ஒரு மகத்தான கலை முயற்சியாக இல்லாவிட்டாலும், சுகந் தரக்கூடிய ரீங்காரமாக இல்லாவிட்டாலும், மனோதத்துவ அலட்டலாக இல்லாவிட்டாலும், இன்னும் என் இதயத்தின் மூலையிலே இருக்கிற அந்த ராகம், என் மூளையைச் சுற்றிச் சுற்றி வருகிறது!

நீ என் பக்கத்திலேயே இல்லாவிட்டால், நான் ஒரு சப்தத்தையும் கேட்கமுடிவதில்லை; எந்த சங்கீதமும் இல்லை.

Oh! What a beat
When our lips meet

ஆ! நம்முடைய நான்கு உதடுகளும் சந்திக்கும்போது இதயம் எவ்வளவு அடித்துக் கொள்கிறது!

அது, வசந்த காலத்து உல்லாச விடுமுறை எழுப்பும் உன்னத கீதமாக இருக்கிறது. ஓ! அந்த இன்ப கீதம் என் உயிருடன் இணைந்து விடுகிறது!

[ஒரு ஆங்கிலப்பாடல்.]

இரண்டு தமிழ்ச்சிப்பாய்கள் ஒரு மலைப்பகுதியில் வேட்டையாடப் போனார்கள். அவர்களை எதிர்த்து ஒரு **காட்டுமிராண்டி**க் கூட்டம் தாக்க வந்தது. ஒரு சிப்பாய்க்கு ஆத்திரம் மிகுந்தது.

“இந்தப்பயல்களைப் பார்த்துவிடுகிறேன் ஒரு கை!” என்று துப்பாக்கியை எடுத்தான்.

அடுத்த சிப்பாய், சாவதானமாக, “வேண்டாம்! இவர்கள் பயல்களல்ல!” என்றான்.

முதற் சிப்பாய் திகைத்து, “பின் யார்?” என்று கேட்டான்.

அடுத்த சிப்பாய் அமைதியாகச் சொன்னான்: “ஆதித்தன் வீட்டுப் பருவ மங்கையர்”!

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்.

கதையமைப்பையோ-கற்பனைக் கருத்துக்களையோ - சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் இசைவு பெறல் வேண்டும்.

(முன் இதழ் தொடர்ச்சி)

காட்சி 46

இடம்: **நீதிமன்றம்**

உறுப்பினர்: **வீரபாண்டியன், பானர்மென், பாளையக்காரர்**

[கட்டபொம்மன் கைவிலங்கோடு கைதிக் கூண்டிற்குக் கொண்டு வரப்படுகின்றான்-கட்டபொம்மனைக் கண்டதும் பாளையக்காரர்கள் எழுகின்றனர். கையமர்த்துகின்றான் பானர்மென்]

பானர்மென்: பண்பால் நிறைந்த பாளையப்பட்டதாரர்களே!

கட்டபொம்மன்: பாளையப்பட்டுப் பச்சோந்திச் கூட்டமே! என்று அதை அழையும்!

பானர்மென்: துடுக்கு மொழிகளை அடக்கிப்பேசும்!

கட்டபொம்மன்: அடக்கியோ, அடங்கியோ பேசுவது அன்னிய நாட்டானுக்குத் தேவை: சொந்த நாட்டான் பேசச் சுதந்தரம் உண்டு!

பானர்மென்: வீண் வாதமேன்? (பாளையக்காரர்களைப் பார்த்து) விவேகிகளே! விசாரணை தொடங்குவோம். (கட்டபொம்மனைப் பார்த்து) எட்டிசையைக் கட்டியாள கனவு காணும் மட்டி கட்ட மொம்ம நாயக்கரே!

கட்டபொம்மன்: அடக்கும்! நாட்டு மக்களின் நலங்காணும் வேட்கை கொண்ட வீரன் கட்டபொம்மனே என்று அழையும்!

பானர்மென்: அடிமை என்பதையும் ஆளுவோர்-மன்றம் என்பதையும் ஆணவத்தால் பேசுகின்றாய் அகம்பாவக்காரன்-அடிமைத்துடுக்கு!

கட்டபொம்மன்: அடிமையாம் அடிமை! யாருக்கு யார் அடிமை? ஆண்ட பரம்பரைக்கா அடிமைப்பட்டம்! ஆண்டவன் படைப்பால் ஆளுக்கு ஆள் அடிமையா? கங்கையையும் கடாரத்தையுல் கட்டியாண்ட காலத்திலே.........கனக விசயர் தலையில் கல் சுமத்திய நாளிலே...—எங்கோ இருக்கும் இமயத்திலே எம் தமிழ் நாட்டுப் பொதியிலே செந்தமிழ்க் கொடி பறந்த அந்தக் காலத்திலே யாருக்கு யார் அடிமை! அருந்தமிழ் நாட்டில் அடியெடுத்து வைக்க முடியாத அசோகனுக்குத் தெரியும்! ஔரங்க சீப்புக்குத் தெரியும்-அவர்கள் பட்ட பாடு குலத்தைக் கெடுக்க வந்த கோடெறிக்காம்புகள் குல நாசக்காரர்கள் பாளையக்கார மேதாவிகள் இவர்கள் குதர்க்க புத்தியால் எம்மை நீர் கூண்டில் அடைக்கலாம்-கொடுமைப்படுத்தலாம்-ஆனால் கொந்தளிக்கும் தமிழர் உள்ளங்களிலே உம்மால்-உம் இனத்தால் ஒருக்காலும் குளிர்ந்த நீரை ஊற்றமுடியாது.

மானமும் வீரமும் தான் மறத் தமிழன் பண்பாடு. வீரத்தையும் மானத்தையும் விலைக்கு விற்று விவேகமற்று வீற்றிருக்கின்றனர் பாளையக்கார மேதாவிகள். .

நீர் இன்று சொன்ன அந்தச் சொல்லைச் செங்குட்டுவன் காதுகள் கேட்டிருந்தால் உன் சிவந்த நாக்குத் துண்டாக்கப்பட்டிருக்கும்! கங்கை கொண்டான் கண்கள் கண்டிருந்தால் உனது கரங்கள் கண்ட துண்டமாக்கப்பட்டிருக்கும்! அடிமையாம் அடிமை! நானா அடிமை! அதுவும் உங்களுக்கா......?

பானர்மென்: காலக்கோலத்தால் மாளப்போகும் நீ, மீள்வதற்கு ஒரு வழியைப்பார்?

கட்டபொம்மன்: மாண்டாலும் மானமிழான் மறத்தமிழன்...... அகில உலகத்தைக் கட்டியாண்ட அவன் பண்பாடு அது—

பானர்மென்: வேண்டாம்! வீண் பிடிவாதம், வீண் கூச்சல் வேதனை தரும்! நீதி மன்றம் என்பதை நினைவில் கண்டு உம்மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் குற்றங்களுங்களுக்கு வாக்குமூலம் மட்டும் தேவை! ஆனாலும் இப்போதும் அஞ்சவும்வேண்டாம்பயப்படவும் வேண்டாம் குற்றங்களுக்குக் குறையிரந்தால்......

கட்டபொம்மன்: குற்றம் இன்னதென்று தெரியாமல் குறையிரக்கக் கூறும் குருடனே! உலகமே எதிர்த்தாலும் ஒரு நொடியில் தூள் தூளாக்கும் உண்மை வீரன் கட்டபொம்மனா உம்மிடம் குறையிரப்பான். துரோகிகளின் சதியால், பாளையக்காரர் வேலைத்தனத்தால், பொம்மையாட்சியின் புத்தியின்மையால் எம்மை நீர் தூக்கிலிடலாம்! அதற்கு அஞ்சிக் கெஞ்சும் பஞ்சையல்ல நான்! தூக்குமேடையைக் கண்டு துயர கீதம் பாடுபவனுமல்ல! எதற்கும் அஞ்சாதவன் இந்த வீரன்-எதற்கும் துணிந்தவன் இந்தக் கட்டபொம்மன்!

பானர்மென்: எதற்கும் துணிந்தவனா!

கட்டபொம்மன்: ஆம்! ஆம்! எதற்கும் துணிந்தவன் தான்! நெருப்பாற்றிலே நீந்திச் செல்ல நேரிட்டாலும், நெஞ்சில் வீரம் குன்றாதவன் இந்த வீரபாண்டியன்!

பானர்மென்: வேண்டாம் இந்த விதண்டாவாதங்கள்! கேள்விக்குத் தக்க பதில்! மாப்பிள்ளை வன்னியருடன் மாப்படையொன்றனுப்பியது எங்களை மண்ணோடு மண்ணாக்கத் தானே!

கட்டபொம்மன்: இல்லை......! அன்னிய நாட்டில் வந்து அவதிப்படும் உங்களை லண்டன் நகருக்குக் கொண்டு செல்ல!

பானர்மென்: கப்பம் கட்டாதது!

கட்டபொம்மன்: கப்பம் கட்டவேண்டுமாம்! கப்பம்! ஏன் கப்பம் கட்டவேண்டும்! வானம் வழங்குகிறது வண்மழையை! கலப்பை உழுகிறது நிலத்தை—நிலம் தருகிறது நெல்லை—நெல் அளிக்கிறது உணவை. உழைத்து உண்டு வாழ்கின்ற நாங்கள் உமக்குக் கப்பம் கட்ட வேண்டிய காரணம்!

பானர்மென்: காரணம் கூற நேரமில்லை!

கட்டபொம்மன்: அப்படியானால் கப்பம் கட்டத் தேவையும் இல்லை!

பானர்மென்: கப்பம் கட்டித்தான் ஆகவேண்டும்!

கட்டபொம்மன்: கடாரம் கொண்ட தமிழன் யாருக்கும் கப்பம் கட்டியதுமில்லை! இனிக்கட்டப் போவதுமில்லை! கப்பம் கட்டவும்மாட்டான்!

பானர்மென்: யாருக்கும் இல்லை எங்களுக்கு......

கட்டபொம்மன்: உங்களுக்கு மட்டுமென்ன? புலிக்கு அஞ்சாதவன் பூனையைக் கண்டஞ்ச வேண்டுமோ?

பானர்மென்: ஜாக்ஷிங்டன் துரையைக் கண்டுகொள்ளாதது?

கட்டபொம்மன்: தேவையில்லை! அதனால் தேடிச் செல்லவில்லை.

பானர்மென்: நாவை யடக்கு!

கட்டபொம்மன்: நாவை அடக்கிப் பேசுவதெப்படி?

பானர்மென்: இறுதியாக நீர் இயம்புவது?

கட்டபொம்மன்: அந்நியன் இந்நாட்டில் அடியெடுத்து வைக்கக் கூடாது! அடிமைச் சின்னம் இந்நாட்டினின்றும் அகற்றப்படவேண்டும்!

பானர்மென்: முடிவாக நீர் குற்றவாளி!

கட்டபொம்மன்: குற்றவாளி—நான்! ஆம் நான் குற்றவாளிதான் பிறந்த நாட்டின் பெயரைச் சொல்லியது குற்றம்—பிறருக்கு அடிமையாகமாட்டேன் என்றது குற்றம்—பிற நாட்டான் சுரண்டலைப் பெயர்க்க எண்ணியது குற்றம்—வெள்ளையனே! வெளியேறு என்றது குற்றம்—கொள்ளைகாரக் கும்பலே கூட்டோடு அழிக்கப்படுவீர் என்பது குற்றம்—உள்ளவனுக்கு இங்கு உணவில்லாத வெள்ளையருக்கு என்றது வேலை என்றது குற்றம்—கள்ளனைக் காவலுக்கு அழையாதே என்றது குற்றம்—வான் ஆண்ட தேவரையும், மண்ணாண்ட மன்னரையும் தானாண்டு வந்த தமிழ் வாழ்க என்றது குற்றம்—தேசீயம் பேசியது தீராத குற்றம்—உரிமைப் போர் கொண்டாடியது ஓர் குற்றம்—உங்கள் சட்டப்படி எல்லாம் குற்றம்தான்—வீட்டுக்காரன் வீட்டைக் கேட்பது விவேகமா? அன்றி வீண் வேலையா—ஒருவனைப் பிடித்துவிட்டோம் என்று ஒய்யாரமாப் பேசலாம்—ஆடலாம்—பாடலாம்—கூந்தாடலாம்! ஆனால் நாளை ஓராயிரம் இளைஞர்கள் தோன்றத்தான் செய்வர்! அப்போது அழியும் இந்த அன்னிய ஆட்சியும் ஆங்கிலேயர் சுரண்டலும், அடிமை நிலைமை!

பானர்மென்: கொண்டு செல்லுங்கள் தூக்குமேடைக்கு...அழிந்தான் அகம்பாவக்காரன்!

காட்சி 47

தூக்குமேடை: தொங்கிடும் தூக்குக் கயிறே! நீ எத்தனைத் தொண்டர்களைத் தொலையாத் தூக்கத்தில் ஆழ்த்தினாய்! மரணத்தை எதிர்பார்க்கும் மாபெரும் தூக்கு மேடையே! நீ எத்தனை எத்தனை மன்னாதி மன்னர்களை மாளக் கொன்றாய்? சனாதனிகளால் ஆக்கப்பட்ட சாவு மேடையே! நீ எத்தனை சன்மார்க்கிகளை சவக்குழியில் வீழ்த்தினாய்! எத்தனையோ தொண்டர்களை எடுத்து விழுங்கியும் இன்னுமா உயிருடன் இருக்கின்றாய்? மரணம்! அது மனிதனுக்குப் புதிதும் அல்ல! புதிரும் அல்ல! மான வீரனுக்கு மரணப்படுக்கை வெற்றித திருவின் விரிந்த மார்பன்றோ! ஆம் வெற்றித் திருவின் விரித்த மார்புதான்! போரிலே மாளும் நிலை ஏற்பட்டிருந்தால் புன்முறுவல் பூத்திருப்பேன்! மாளிகையிலே பகைவரை மாளச்செய்து மாண்டிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்! ஆனால் நான் காட்டிக் கொடுக்கும் கயவர்களால் கைது செய்யப்பட்டு, மரணப் பேயோடு மல்லாடி நிற்கிறேன்! ஏ! மரணமே! வா! வா!! விரைந்து வா!!!

ஊமத்துரை உன்னைப் பார்க்க முடியவில்லை-அண்ணன் மடிந்தானே என்று ஆத்திரப்படாதே! அவசரப்படாதே அதைரியப்படாதே! உதவியாக நின்ற ஒரு அண்ணன்தான் இறந்தான்! ஆனால் உதவியாக ஓராயிரம் அண்ணன்மார் தோன்றுவர் அஞ்சாதே! செந்தமிழ் நாடே! இந்த சிறியேனை மன்னித்து விடு! தொண்டாற்ற எண்ணினேன்! துரோகிகள் என்னைத் தூக்குமேடைக்கு கொண்டுவந்து விட்டனர்! வருங்காலத் தமிழகமே! வருகின்றேன்! நீயாவது என்னை வாழ்த்துவாயா?

(கழுத்தில் மாட்டிக் கொள்ளுகின்றான்)

முற்றும்

சாவதற்கு முன்னாலே ...!

கண்ணதாசன்

உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது...

புதிய குழந்தை பிறந்துவிட்டது; பழைய குழந்தை வாலிபனுசிவிட்டது; பழைய வாலிபன் கிழவனுகிவிட்டான்; பழைய கிழவன் மடிந்துவிட்டான்—

உலகம் சுற்றிக்கொண்டிருக்சிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்சிறது...

நேற்று நான் குழந்தை; இன்று வாலிபன்! நாளை கிழவன்! பிறகு? மடிவேன்!

முளைத்தகொடி ஓர் நாள் பட்டுப் போகும்!
பூத்த மலர் ஓர்நாள் உலர்ந்து போகும்
நானும் ஓர் நாள்மடிந்துபோவேன்!
வாழ்பவர்கள் யாவரும் மண்ணுவது திண்ணம்!

தழதழவென்றிருக்கும் மேனி திரைதிரையாய் ஆகிவிடும்—கருகருவென்றிருக்கும் கூந்தல், பஞ்சு பஞ்சாய்ப் போய்விடும்-பளபளவென்றிருக்கும் கண்கள் குழிகுழியாய் மாறிவிடும்—விடுவிடென்றுநடக்கும் கால்சுள் நடுநடுங்கிப் போய்விடும் - ஐயோ! மரண பயம் என்னை நெருங்கிவிடும்'

இதோநிற்கிறது மரம்...

நேற்று இது 'பசேல்' என்றிருந்தது...கொழுத்துக் செழித்திருந்தது...அடர்த்தியாக, அழகாக இருந்தது!

இன்று...?

ஐயோ! கூந்தலிழந்த குலமாது போல் நிற்கிறது. மொட்டையாகக் காட்சியளிக்கிறது ... செழுமையெல்லாம் போயே போய்விட்டது...! நேற்று ஒரு புருஇதில் கூடுகட்டியது.

கூடு அப்படியே இருக்கிறது...
புருவைக் காணேம்!

ஐயோ; எவனே கொன்றுவிட்டான்!
புரு இறந்துவிட்டது...'
ஐயோ! நானும் ஒருநாள் மடிந்து போவேன்!

உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது...
மரணபயம் தூரத்தில் நின்று சிரிக்கிறது...!
ஐயோ! நானும் ஓர்நாள் மடிந்து போவேன்!

நான் மடிந்துபோவேன்...இடுகாட்டில் என்னைப் புதைப்பார்கள்... உறவினர்கள்அழுவார்கள்...மனைவி விதவை ஆவாள்...குழந்தைகள் கதறி அழும்...நான் அதைக் கேட்க மாட்டேன்...என் காதுகளில் அது விழாது...நான் ஒரு இடத்துக்குப் போவேன்..-அது எந்த இடம் என்று எனக்குத் தெரியாது...இன்னும் யாரும் அதைக்கண்டு பிடிக்கவில்லை...அங்கே எனக்கு உணவிருக்குமா? சுகமிருக்குமா?... எனக்குத் தெரியாது...அதோடு, நான் எனக்கே மடிந்துபோனுலும் போகலாம்...!

ஐயோ! நான் ஒருநாள் மடிந்து போவேன்!

மக்கள் என்பெயரைச் சொன்னுலும் சொல்லிக் கொள்வார்கள்! இருக்கட்டுமே! அதனுல் எனக்கென்ன பயன்!

நான்தான் எதையும் காண முடியாதே!
நான் மடிந்துபோய் மறைந்து விடுவேனே!

ஆமாம்; அது ஒருநாள் நடக்கத் தான் போகிறது!

அதுவரைக்கும் நான்?...அழுது கொண்டுதான் இருக்க வேண்டுமா?

இல்லை! அனுபவிப்பேன்! ஆனந்தத்தில் புரள்வேன்... இன்பத்தின் எல்லையைக் காண்பேன்!

''டேய்! யாரடா அவன்! என் வீட்டுச்சொத்தைத் தொடாதே! இது எனக்கு உரியது! தொட்டால், உதைப்பேன்! இது என் மூதாதைகள்சொத்து! என் சொத்து! என் குழந்தைகள் சொத்து! நீயார் அதைத்தொட! வரியா? முதுகிலே போடுவேன் வரி! பேசாமல் போய் விடு! என் வீட்டுச்சொத்தை நான் அனுபவிக்கப்போகிறேன்! வீடு தாண்டி வந்து திருடாதே! உன் வீட்டுச்சொத்து உனக்கு! என் வீட்டுச்சொத்து எனக்கு! என் வீட்டுச் சொத்தை நான் அனுபவிக்கப் போகிறேன்! நீ உன் வீட்டுக்குப் போ! போகிறுயா இல்லையா?
உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது...
கா ல ம் ஓடிக்கொண்டிருக்கிறது!
நான் அனுபவிக்கவேண்டும்-நீ போய்விடு!

ஆகா! என் வீட்டுச்சொத்து எனக்கு வந்துவிட்ட்து!
நான் அனுபவிக்கப்போகிறேன்!
ஐயோ! யார் இவன்?

''யார் நீ?''

''இந்த வீட்டில் வசிப்பவன்!''

''எப்பொழுது முதல்...''

''வெகுநாட்களாக!...''

''அதனுல் சொந்தம் பாராட்டுகிறுயா! மரியாதையாகப் போய்விடு! உனக்குச் சொந்தமாக வீடு கிடையாது! உலகத்திலேயே சொந்த வீடில்லாதவர்களில் நீயும் ஒருவன்! என் வீட்டில் இருந்துகொண்டு உயிரை வாங்காதே! போய்விடு! ...
உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது
ஐயோ! மரணபயம் வருகிறது!
நான் ஒருநாள் மடிந்துபோவேன்!

அதற்குள் நான் அனுபவிக்க வேண்டும். ஆனந்தத்தில் புரள வேண்டும்! போய்விடு! சுரண்டித் தின்னுதே! சூழ்ச்சி செய்யாதே! வேறு வீடு கட்டிக்கொள்! என் வீட்டை எனக்கு விடு! போ! போ!

ஆகா! தடையில்லை! தடையில்லை! விடுதலை! விடுதலை! எங்கே...எங்கே? நண்பர்கள் எங்கே? உறவினர்கள் எங்கே? மனைவி எங்கே? குழந்தை எங்கே? அன்னை எங்கே!

என்நண்பர்களே!ஓடிவாருங்கள்!

முத்தாலே பந்தல் போடுங்கள்! வைரத்தாலே பாதை சமையுங்கள்! ஓ என் உயிருக்குரிய நண்பர்களே! சுவையான உணவு சமைக்கிறேன்! உண்ணுங்கள்! தேன் வேண்டுமா? பால்வேண்டுமா? கனி வேண்டுமா? தெவிட்டாது உண்ணுங்கள்!

உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது...
நாம் ஒருநாள் மடிந்து போவோம்...

இடைக்காலத்தை வீணுக்காதீர்! உண்போம்! புதுமை செய்வோம்! பெருமை கொள்வோம்! மற்ற வீடுகளிலிருந்து உயர்ந்து நிற்போம்! விந்தைக் கருவிகள் வேண்டியன செய்வோம்! நாம் அனுபவிப்போம்! வாரி வழங்குவோம்!

அண்ணு! தம்பீ! அத்தான்! ம்மாமா! அப்பா! நமது வீட்டுக்கு நல்லநாள்! மகிழ்வோம்! ஆடுவோம் பாடுவோம்!

டேய் முத்து! தூங்காதே! எழுந்திரு! கண்ணைத் திறந்துபார்! நம் வீடு நமக்கே வந்துவிட்டது! பச்சைப் பசேலென்ற காட்சி!...பசியே இல்லாத உயிர்கள்! கண்ணைத்திற! வந்துவிட்டதுவாழ்வு! பார்! பார்'
உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது...
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது...
நாம் ஒருநாள் மடிந்துபோவோம்!

அதற்குள் உயர்ந்து நிற்போம்!
உல்லாசமாக வாழ்வோம்! வா! வா'

என் தாயே! கேட்டாயா சேதி! விடுதலை விடுதலை! உன் பாசக் கரங்களில்வாரிஎடுத்துக்கொள் கொஞ்ச நேரம் நான்மெய்மறந்திருக்கிறேன்! ஓ என்செல்வங்களே!ஓடிவாருங்கள்! உங்களை என் மார்போடு அணைத்துக்கொள்கிறேன்! ஓ என் உயிரே! வாராய்!காதலி! மகிழ்ச்சிக் கடலிலே நீந்தி வருவோம்! வா'!
நாமெல்லாம் ஒரு குடும்பம்!
இந்த வீடு நமக்குச்சொந்தம்!
வாருங்கள் எல்லோரும்; மகிழ்ந்திருப்போம்!

உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது—
காலம் ஓடிக்கொண்டிருக்கிறது...
ஐயோ! மரணம் வரப்போகிறது!

ப்பூ! மரணமாவது மண்ணுங்கட்டியாவது! வரட்டுமே! இனி எனக்கென்ன கவலை!

சாட்சியின் கோபத்தால், விடுதலை!

கல்லக்குடிப் போராட்ட வழக்கு, திருச்சியில், ராதாகிருஷ்ண மேனன் என்னும் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மொத்தம் ஐம்பத்தாறு வாய்தாக்கள் போடப்பட்டு, அத்தனை முறையும் தோழர்கள் வந்து வந்து போயினர். ஒரு முறை வாய்தாவுக்கு வந்தபோது, எங்கள் வழக்கை எடுப்பதற்கு முன் மாஜிஸ்ட்ரேட் ஒரு மாடு திருடிய வழக்கை எடுத்து விசாரித்துக் கொண்டிருந்தார். திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டவன், தானே தனக்கு வக்கீலாகி வாதித்துக்கொண்டிருந்தான். போலீசார் அவனுக்கு எதிராக, அவனது ஊரைச் சேர்ந்த ஒருவனையே சாட்சியாகக் கொண்டு வந்திருந்தார்கள். அந்த சாட்சியைப் பார்த்து, குற்றம் சாட்டப்பட்டவன் கருவிக்கொண்டே இருந்தான். சாட்சியும் குற்றம் சாட்டப்பட்டவனைத் திருடனுகவே கூறி, அதைத் தான் பார்த்ததாகவும் கூறி, சாட்சியத்தை முடித்தான். உடனே குற்றம் சாட்டப்பட்டவன், அவனைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தான்.

குற் : நான் திருடியதை பார்த்தாயா?

சாட் : பார்த்தேன்!

குற் : இதற்கு முன்பும் வேறொருவனுக்கு எதிராக நீ சாட்சியம் சொல்லியிருக்கிறுயல்லவா?

சாட் : சொன்னேன்!

குற் ; இத்தனுந்தேதி இன்ன கோர்ட்டில் இன்னுருக்கு எதிராக சாட்சி சொன்னுயல்லவா?

சாட் : சொன்னேன்!

குற் : எனக்கு எதிராக தஞ்சாவூர் கோர்ட்டில் சாட்சியம் சொன்னுயல்லவா?

சாட் : (கோபமாக) சொன்னேன்! அதற்கென்ன இப்பொழுது!

குற் : (அமைதியாக) பொய்ச் சாட்சி சொல்வதுதானே உன் தொழில்?

சாட் : (கோபம் அதிகரிக்க) ஆமாம்!... அதான் என் தொழில்! போ!

உடனே குற்றம் சாட்டப் பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து, ''எழுதிக்கிங்க சாமி! அதான் அவன் தொழிலு!'' என்று கூவினுன். மாஜிஸ்ட்ரேட்டும் அப்படியே எழுதிக் கொண்டார்! சில நாளில அவன் விடுதலையானுன்!

கண்ணதாசன்

வேலூரில்
தேன்றல் விற்பனையாளர்
திரு M. G. கேசவன்
அருகாண்டம்பூண்டி பெரிய தெரு,
தோட்டப்பாளையம் :: வேலூர்

கோவையில்
தேன்றல் விற்பனையாளர்
எஸ். சதாசிவம்
இன்ப வாழ்வு பதிப்பகம்
ஆர். எஸ். புரம் :: கோயமுத்தூர்

பெரும்பயணம்

கண்ணதாசன்

1939 மே 24

ஈரோட்டிலிருந்து மறுநாளே, அண்ணல்
எழிற்சென்னை நகருக்கு வந்தார்; அங்கே
தேரோட்டம் போல், எங்கும் அழகுமக்கள்
சிங்கத்தை வரவேற்கக் கூடுகின்றார்!
"ஈரோட்டுப் பெரியார் எந்தந்தாய்! வாழ்க!"
எங்கெங்கும் ஒலிமுட்டும்! இதுவே வாழ்த்து!
பார் போற்றும் திறத்தானைப் பகைவர் கூட்டப்
பண்பாளர் சிலர் கூட வாழ்த்தலானார்!

சர் கே. வீ. ரெட்டியொடும் பன்னீர்செல்வம்
தமிழ்த் தென்றல் திரு. வி. க., சீவாஜ், மற்றும்
நற்பண்பில் எந்நாளும் வளர்ந்த வீரர்
நம் சே. தே. நாயகமும் பெரியார் தம்மை
இற்சென்று சந்தித்தார்; இவர்களோடும்
எம். சீ. ராஜாவும் உடன் சென்றிருந்தார்!
வெல்சிங்கப் பெருமக்கள் பலபேர் வந்து
வீரர்க்குப் 'பல்லாண்டு' கூறுகின்றார்!

ஆங்கிலத்து 'மெயில்' ஏட்டின் நிருபர் வந்து
அடலேறும் பெரியாரைப் பேட்டிகண்டார்!
"ஏங்கியுளார் தமிழ் நாட்டார்! இன்னும் இந்தி
எமை விட்டுப் போகவில்லை! இந்நேரத்தில்
தாங்கவொண்ணா நலிவோடும் வெளிவந்துள்ளேன்
தமிழரிடை வெகுகாலம் இருக்கமாட்டேன!
தீங்குமிகும் சிறைக்கூட்டம் மீட்டும் என்னைத்
திரும்பி வரச் சொல்லும்! நான் போவேன் மீண்டும்!"

இவ்வாறே நிருபர்க்கு 'ஐயா' சொன்னார்!
"இன்னுமொரு பப்பத்துப் பள்ளிக்குள்ளும்
ஒவ்வாத இந்தியினை நுழைப்பதற்கே
உன்னுகிறார் ஆள்வோரே! அஃதுநேர்ந்தால்
அவ்வேளை நம் கூட்டம் பலம்பெருக்கி
அழித்துவிடும் இந்தியினை!" என்றும் சொன்னார்!
'வவ்வால்கள்' உள்ளத்தில் மருட்சிதோன்ற
வகையாகச் செய்தியினை 'மெயில்' விளக்கும்!

இந்நேரம் ஓர் செய்தி சொல்ல வேண்டும்!
இழிவான காங்கிரசில் வதிந்திருந்த
பொன்னனை குணவாளன், ஏழை உள்ளிற்
பொருந்திவளர் நடராசன் (என். வீ.) "எங்கள்
கண்ணனை தாய்மொழியைக் காப்பேன்" என்று
காங்கிரசை விட்டு வெளியேறி வந்து
அண்ணாவின் அருமந்த தம்பியானார்!
'ஐயா'வும் மகிழ்வோடு வரவு சொன்னார்!

நடராசன், காங்கிரசில், அந்த நாளில்
நல்லதொரு பொறுப் பேற்றுக்கொண்டிருந்தார்!
விடமான இந்தியினை வேரறுக்கும்
மேலான எண்ணத்தால் ஈண்டு வந்தார்!
அடிமீது அடிவைத்து அவரை நந்தம்
அரங்குக்கு வரவைத்தார் அறிஞர் அண்ணா!
திடமான நெஞ்சத்தான் என்பதாலே
சீராளர் நம் அண்ணா அன்பு வைத்தார்!

1939 மே 28

'சில்' லென்று வீசிவரும் கடலின் காற்று!
திரண்டிருக்கும் ஒரு லட்சம் தமிழர் கூட்டம்!
'நில், இந்திப்பெண்ணே' இத்தமிழர் நாட்டில்
நீவாழ நாம் இல்லை! திரும்பிப்போ! என்(று)
எல்லோரும் முழங்குகிறார்; உணர்ச்சியோடு!
எங்கெங்கும் தலைகளடா! மணலைக் காணோம்!
'வில்' லென்றால் 'கணை' யென்னும் வீரர் சூழ,
விண் முட்ட முழங்குகிறார் பன்னீர்ச்செல்வம்.

"கட்டாய இந்தி நுழைவதால் தமிழர்தம் மொழி கலை நாகரிகம் முதலியவற்றிற்கு வரும் ஆபத்தை எடுத்துக் காட்டியதைத் தவிர வேறொரு பாவமும் செய்தறியாத நமது ஒப்பற்ற தலைவர் அவர்களைக் கடந்த 5 மாதங்களாகச் சிறையிலடைத்து வைத்திருந்தது ஆச்சாரியார் ஆட்சி.

இன்னும் 15 மாதங்கள் செல்லுமே நமது தலைவர் பெரியார் வெளி வர என்று நாம் எண்ணிக் கலங்கிமிருந்த வேளையில் திடீரென அவர் விடுதலை செய்யப்பட்டார் என்பதை உணர்ந்த நமது மகிழ்ச்சி பெரிது; மிகப்பெரிது.

பெரியார் இந்த இயக்கத்தைத் துவக்கிய காலே, முதல் அமைச்சர் கனம் இராசகோபாலாச்சாரியார், ஒரு இராமசாமி நாயக்கரும் ஒரு சோம சுந்தர பாரதியும் தானே கிளர்ச்சி செய்கிறார்கள் என்று வெகு அலட்சிய மாகக் கூறினார். பின்னால் அதே கனம் ஆச்சாரியார், புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வந்து கொண்டே இருக்கின்றனரே என் செய்வேன் என்று சொல்லலானார்.

பெரியாரை வெளியில்விட்டால் கிளர்ச்சி ஓங்கி, தங்களுக்கு ஆபத்து வந்து விடும் என்று அஞ்சித்தானே 5 மாதங்களுக்குமுன் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டிற்குத் தலைமைதாங்க பெரியாரை இச்சர்க்கார் விடுதலை செய்யவில்லை. இப்பொழுது நமது பெரியார் நம்மிடையே வந்து விட்டார். இதற்காக நாம் சர்க்காருக்கு நன்றி செலுத்த வேண்டுமா? மன மாற்றத்தினாலோ அல்லது ஒரு குடி அரசு நாட்டில் எதிர்க்கட்சித் தலைவருக்குக் காட்டவேண்டிய மரியாதை இன்னதென்பதை உணர்ந்தோ சர்க்கார் இவ்வாறு செய்திருந்தால் நாம் நன்றி செலுத்த வேண்டியது தான். அப்படியானால், மாநாடு கூடுவதற்கு முன், சட்டசபைகளில் எதிர்க் கட்சியினர் கேட்டுக் கொண்டதன்படியாவது, அல்லது பெரியார் உடல் நோய் கண்டு சென்னை மருந்தகத்தில் இருந்த போதாவது, தமிழர் வேண்டுகோளுக்கிணங்கிப் பெரியாரை இந்த அரசியலார் விடுதலை செய்திருக்க வேண்டும். அந்தப்படியும் இந்த சர்க்கார் செய்யவில்லை. பெரியாரை விடுதலை செய்யாதது மட்டுமல்ல; அவரது நண்பர்களும் அன்பர்களும் அவரைக்கண்டு பேசுவதற்குக் கூட தடை செய்து வந்தனர், கொடிய வெப்பம் பொருந்திய பெல்லாரிச் சிறைக்கு நம் பெரியாரைக் கொண்டுபோனார்கள். இதைக் குறித்துக் கேள்வி கேட்டபோது அது கைதியின் நன்மைக்கே என்று கனம் ஆச்சாரியார் பதிலளித்தார். அவர் விடுதலை செய்யப்பட்டதன் காரணத்தைச் சர்க்கார் வெளியிடவில்லை. ஒரு வேளை பெரியார் சிறையில் இறந்துவிட்டால் எங்கு தங்கள் மீது பழி வந்து விடுமோ எனப் பயந்துதான் நோய் முற்றிய இந்நிலையில் பெரியாரை இப் போது விடுதலை செய்திருக்கின்றனர்.........போனது போகட்டும். மெய் யாகவே சர்க்கார் நல்ல எண்ணத்துடன் அவரை விடுதலை செய்திருந்தால் இன்னும் இரண்டு காரியங்களை அவர்கள் செய்திருக்க வேண்டும். கட்டாய இந்தி திட்டத்தையும் அடியோடு எடுத்துவிட்டிருக்க வேண்டும். கட்டாய இந்தி இருக்கும் வரையிலும் சிறையில் ஒரு உயிராவது இருக்கும் வரை யிலும் நமக்கு ஓய்வு என்பது கிடையாது. எப்படியாவது நாம் இந்தக் கட்டாய இந்தியைத் தொலைத்துத்தான் தீரவேண்டும்.

இன்று நம்மிடையே பெரியார் இருப்பதால் நாம் மகிழ்ச்சி அடை கிறோம்; பெரு மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் நூற்றுக்கணக்கான தொண்டர்களும் தாய்மார்களும் குழந்தைகளும் இந்தி எதிர்ப்பு இயக்கத் தில் சேர்ந்த குற்றத்திற்காகச் சிறையில் வாடி வருகையில் நாம் மகிழ்ச்சி அடைவது எப்படி?

பெரியார் சொன்ன ஒன்றைத் தவிர மற்றெல்லாவற்றையும் நிறை வேற்றித் தீரவேண்டியது தமிழர் ஒவ்வொருவருடைய நீங்காக் கடமை யாகும். உடலைத் தேற்றிக்கொண்டு மீண்டும் சிறை செல்லத்தான் வெளி வந்திருக்கிறேன் என்று பெரியார் சொன்னது போல் அவர் மீண்டும் சிறை செல்ல நாம் விடக்கூடாது. அப்படி ஒருக்கால் பெரியார் சிறை செல்லும் நிலைமை வந்தால் தமிழர் இரண்டரை கோடி பேரும் அவருக்கு முன் சிறை செல்லுவோம் என்று அவருக்கு நாம் சொல்லவேண்டும். பெரியார் நம்மிடையே இருந்தால்தான் நாம் முன்னேற முடியும். சிறை செல்லாது ஒரு தமிழன் இருக்கும்வரை பெரியாரை மீண்டும் சிறைவாசம் அனுபவிக்க நாம் இடங்கொடுக்க மாட்டோம். வெளியே நாம் இருக்க அவர் உள்ளே சிறையிலா? இனி அது முடியவே முடியாது. தமிழர்கள் உண்மையில் சுதந்தரமாக வாழவேண்டுமானால் ஆரிய ஆட்சியிலிருந்து நாம் விடுதலை அடையவேண்டும். அதற்கு நம்மைக்கொண்டு செலுத்து தற்குப், பெரியார் ஏற்றவர்; பெரியாரே ஏற்றவர்."!

(தொடரும்)

★★★ சரியா? தப்பா? ★★★

மாலைச் சூரியன் கடலுக்குள் மூழ்கி விட்டது. அழகு இரவு வரும் வேளை. இரவு தனது பனி மலர்ப் பாதங்களால் பூவின் மேல் காட்சியளிக்கும் பனிபோல் தனது பிரயாணத்தை தொடங்கும் நேரம். தொடுவானில் நீலக்கடலை கோல வானம் தழுவி நிற்கும் காட்சி. அவன் கலைஞனாகவோ அல்லது கவிஞனாகவோ இருந்திருந்தால் மேற்கூறியபடி அழகுத் தமிழில் இயற்கை அழகை தேனிலே குழைத்து பலர் பருக கொடுத்திருப்பான். ஆனால் அவன் ஒரு திருடன். மனம் பொருந்தி அவன் திருடவில்லை. இருந்தாலும் அவனை திருடன் என்றே சமூகம் அழைக்கிறது. இந்த உலகில் அவன் மட்டுமா திருடன். எல்லோருமே ஒவ்வொரு வகையில் திருடர்கள்தாம். கதர்ச்சட்டை போட்டுக்கொண்டு கௌரவமாக திருட்டுத்தனம் செய்வோரும் உண்டு. கையில் கன்னக் கோல் ஏந்தி பகிரங்கமாக திருடுவோரும் உண்டு. ஆனால் முன்னவனுக்கும் பின்னவனுக்கும் வித்தியாசம் உண்டு. பகிரங்கமாக திருடுவோரைக் கண்டால் மக்கள் அவன் திருடன் என்று எண்ணி ஒதுங்குவர். ஆனால் உள்ளத்தில் நஞ்சு வைத்திருப்போரை எப்படி நம்புவது? அவன் ஒரு வகையிலும் சேரவில்லை. அவன் ஒருகௌரவ திருடன்.

அப்பப்பா! மூன்று ஆண்டுகள் இந்த சூதும் சூழ்ச்சியும் நிறைந்த உலகத்தை காணாமல் நிம்மதியாக வாழ்ந்தான். சிறை செல்வதற்கு முன் அவன் வாழ்க்கை வேறு பாதையில் தான் போகும். முன்பு கிழக்கு திசையை நோக்கி போய்க் கொண்டிருந்தான். இப்பொழுது மேற்கு திசையில் போய்க்கொண்டிருந்தான். அவனது வாழ்க்கை திரும்பிவிட்டது. ஆனால் இந்த உலகம், ஓடும் ஆறு கடலில் சங்கமாவது போலத்தான் காட்சியளிக்கிறது. ஆற்றின் பாதை மாறவில்லை வழியில் அகப்பட்ட பொருள்கள் ......உலகம் மாறினதாக அவனுக்கு தெரியவில்லை, கிழிந்த சட்டை. சுருங்கிய முகம். எண்ணெயைக் காணா அவன் தலை ஏங்கிக் கொண்டிருந்தது. தலை மட்டுமா? உயிர், உணவு, உடை அத்தனையும் தான். கையிலே உள்ள நாலணாவில் ஒன்னறை அணாவிற்கு ஒரு கட்டு பீடி வாங்கிக்கொண்டு நிம்மதியாக ஒரு விளக்கு கம்பத்தின் கீழ் உட்கார்ந்து புகைந்து கொண்டிருந்தான். 'பிச்சைக்கார பயல்க வயித்துக்கு இல்லன்னாலும் பீடி குடிக்க மறக்க மாட்டான்க' என்று பிறர் நினைப்பார்கள். ஆனால் அவனுக்கு கொஞ்ச நேரமாவது நிம்மதி வேண்டும். பக்கத்தில் உள்ள ஓட்டலின் வெளியே எறியப்பட்ட ஒரு எச்சில் இலையை காக்கைகள் ருசி பார்த்துக் கொண்டிருந்தன. சே! சே! காக்கைகளா? மனிதன் என்று பிறகு உணர்ந்தான். ஓட்டல் ரேடியோவில் இருந்து கீதம் கிளம்பியது.

'அல்லற்படும் ஏழையை கள்ளன் என்று ஏசுகின்றார்' நடைமுறையில் நடப்பதை எவ்வளவு அழகாக காண்பிக்கிறது. அவனது சிந்தனை இறந்த காலத்தை நோக்கிச் சென்றது.

★

சேகர் அதுதான் அவன் பெயர், அவன் ஒரு கவிஞன். ஆற்றோரத்திலே தென்றல் கந்ற்று வீச, அங்கே குயிலின் குரலைப் பழித்த மயிலின் ஆட்டத்தைப் பழித்த மங்கை ஒருத்தியோடு கொஞ்சிய மணாளனின் காதல்கீதம் இருக்காது அவனது கவிதையில். காதல்தான் இலக்கியம் என்பதல்ல அவனது கருத்து. நெற்றி வேர்வை நிலத்தில் பட, ஓடாக உழைத்தாலும், தேடாத இடமெல்லாம் தேடினாலும் பாட்டாளியினால் காணாத செல்வத்திற்கு காரணம் ஏன் என்ற கேள்வியிலே அவன் கவிதைகள் எழுதினான். சீமான் வீட்டுச் சிங்காரிகளின் அழகா? அது செயற்கையின் வர்ண ஜாலம்தான் என்று சொன்னால் யார் நம்புவார்கள். இயற்கையின் வனப்புத்தான் அது என்றால் குப்பையில் கிடந்தாலும் கோபுரத்தில் ஏற்றிவைக்க தயாராயிருப்பார்கள். ஆனால் அவன் முதல் ரகத்தை சேர்ந்தவன். துன்பப்படுவோரின் சோக கீதங்கள்தான் அவனது கவிதைகள். வாட்டமுறும் வளமில்லா வாழ்க்கையை அனுபவிக்கும் பஞ்சைகளின் நிலையை அவனது கவிதைகள் மூலம் படித்தறிந்தவர் அநேகர். சுருங்கக் கூறின் மனிதன் வாழ்வதற்குத்தான் பிறக்கிறான் என்ற தத்துவத்திலேயே அவனது கவிதைகள் பிறந்தன. 'எழுத்தாளன் வறுமையோடு பிறக்கிறான்' என்று மேல்நாட்டு அறிஞன் சொன்னது என்றுமே பொய்யாகாது. அவன் கவிதைகளுக்கு இந்நாட்டில் மதிப்பு கிடையாது. ஏனென்றால் அவன் ஒரு கவிஞன். வறுமையால் உழன்ற அவன் தாய் நினைத்தாள் தன் மகன் தன்னை காப்பாற்றுவான் என்று. ஆனால் அவனோ கவிதைப் பைத்தியம். நோயின் கொடிய வாயில் அவன் தாய் விழுந்தாள். மகனின் கவிதையால் அந்தத் தாய் காப்பாற்றப்பட முடியாது. ஆனால் 'காசு' அவளைக் காப்பாற்றும். இப்பொழுது அவனுக்கு காசு வேண்டும். சொர்க்கத்தை அவன் கண்டிருந்தால் ரூபாய் நோட்டுக்களையும் கண்டிருப்பான். ஆனால இரண்டும் அவனுக்கு எட்டிக்காய். இல்லை! இல்லை! எட்ட முடியா பழங்கள். தாங்க முடியாத சோகத்தைச் சுமந்து கொண்டு நடந்தான். பத்துமாதம் சுமந்து பெற்று, பாலூட்டி சீராட்டி வளர்த்து, குங்குமப் பொட்டிட்டு குறுநகை களித்து, மழலைமொழி ரசித்து பள்ளிக்கு அனுப்பி இன்று கவிஞனாக்கிய அவனுடைய தாயை காப்பாற்றி யாகவேண்டும். இல்லை என்றால் அவன் மனிதன் இல்லை. எப்படி காப்பாற்றுவது? காசு வேண்டுமே!

இந்த குப்பைத் தொட்டிக்கு பக்கத்தில் ஒரு நூறு ரூபாய் நோட்டு கிடந்தால்...இப்படி அவன் எண்ணம். வாழ்வில் வசதியுள்ளவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு எல்லாம். கேவலம் பஞ்சைகளுக்கா இது கிடைக்கும். சே! சே! நினைவிலாவது பணக்காரன் ஆகலாம் என்று நினைத்தான்போலும் அவன் மூதாதையர்கள் பணக்காரர்கள். இல்லாவிட்டால் அவன் காலில் ஒரு 'பர்ஸ்' தட்டுபடுமா? ஆவலோடு எடுத்தான். உள்ளே இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்கள். அதோடு கூட சொந்தக்காரரின் விலாசம் உள்ள ஒரு சீட்டு எட்டிப் பார்த்தது. அவன் தாய் பிழைத்துக் கொண்டாள். இல்லை, அவன் ஏழையானாலும் அவனிடம் நேர்மை உண்டு. அவனுக்கு மனப்போராட்டம். முடிவில் நேர்மைக்கு வெற்றி. இப்படியும் ஓர் மனிதனா? வாழத் தெரிந்தவன், நல்லதை நினைத்தான். அந்த பர்சை அதன் சொந்தக்காரரிடம் கொடுக்கவேண்டும் என்று நினைத்தான். ஆனால் அது தீமையைக் கொடுத்தது. ஒரு முரட்டுக் கரம் அவன் தோளைப்பற்றியது. அதைத் தொடந்து ஒரு குரல் 'திருட்டுப்பயலே வாடா போலீஸ் ஸ்டேஷனுக்கு'. முன்னுரை முடிந்து விட்டது. முடிவுரை அவனுக்கு மூன்று வருடக் கடுங்காவல் திருடினதற்காக. அவன் தன் தாயின் நிலையை எடுத்துச் சொன்னான், நல்லவர்களுக்கு காலமில்லை. ஒவ்வொரு தாயும் தன் மகன் பின்னால் தன்னை காப்பாற்றுவான் என்று தான் வளர்க்கிறாள். பாசம் இல்லை என்று அர்த்தமல்ல. ஆனால் அவன் முயற்சி செய்தான் முடியவில்லை.

★

ஒரு துளி கண்ணீர்கூட அவனது விழிகளில் தேங்கவில்லை. தன் தாயைப்போய்ப் பார்க்கவேண்டும் என்று கூட அவன் நினைக்கவில்லை. இப்பொழுது தாயின் எலும்புக் கூட்டை பார்க்கலாம். ஆனால் அதற்குக் கூட கறையான்களின் போட்டி நடக்கும். அவன் இந்த உலகத்தில் ஒன்றையும் விரும்பவில்லை. விடுதலையடைந்தவுடன்தன் தாயைப்பார்க்க ஒரு கைதி ஓடுவதை முன்பு சினிமாவில் பார்த்திருக்கிறான். அவன் தாய் அங்கு இருந்தாள். ஆனால் இவனுடைய தாய் ......உணர்ச்சியற்ற குரலில் 'அம்மா' என்று அலறினான். அவன் மனம் மரத்து விட்டது. இனிமேல் அவன் நல்லவனாக வாழவே முடியாது. ஒரு முறை திருடினால் அவன் எப்பொழுதும் திருடன்தான். சமுதாயத்தை அவன் குறை சொல்ல விரும்பவில்லை. மக்கள் மனப்பான்மை அப்படி. பீடியைக் குடித்துக் கொண்டே எழுந்து நடந்தான். உயர்தரமான ஆடைகளை அணிந்து கொண்டு கல்லூரி வாலிபர்கள் தங்களுக்கு முன் செல்லும் கன்னியரின் பின்னழகை ரசித்துக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிக் கவலை கிடை யாது. நடந்து சென்ற அவன் தி றென்று நின்றான். அவன் கா களிலே ஒரு 'பர்ஸ்' தட்டுப்பட்டது. ஆவலோடு அதை தன் பைக்கு திணித்துக் கொண்டான். அவ வாழ்நாளிலே இன்றுதான் ஒ 'நல்ல' காரியத்தைச் செய்திரு கிறான். விடு விடு என்று ஓ டலை நோக்கி நடையைக் கட்டினான் சரியா? தப்பா? என்று அவ சிந்தித்துப் பார்க்கவே இல்லை. எ சிந்தனையின் பலனை அவன் முன் ஒரு முறை அனுபவித்திருக்கிறா

'நல்லதைச் செய்ய நினைத்தா அதற்குப் பரிசு தண்டனை. தீ யைச் செய்தான்........குற்ற அது?

பாளை. கு. ஜோசப் பே

இதோ தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்

மதறாஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்:

மேனகா

பத்மினி பிக்சர்ஸ்:

முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல், நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம், அம்மையப்பன்.

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

குழந்தை இன்பம்!

பட்டினைப் பழிக்கும் மெய்யே
பாகினை வெல்லும் சொல்லே
சொட்டிடும் இதழில் தேனே
துவளுமுன் நடைதான் கூத்தே
மட்டிலா எழில்தான் கொண்ட
மலர்முகக் குழந்தை நீதான்!
அட்டிதான் உண்டோ உன்றன்
அமைப்புதான் அமிழ்த மென்றல்!

அன்னையின் மடியை நீதான்
அழகிய மஞ்ச மாக்கி
சின்னவுன் முகத்தின் வண்ணச்
சிமிழ்விழி உறங்கக் கண்டே
தன்னையும் மறந்தே அந்தத்
தாயுளம் மகிழ்வில் தோயும்
கன்னலா முன்றன் பேச்சில்
களித்திடா உள்ளம் கல்லே!

காரிருள் நீக்கும் விண்ணின்
கதிரவன் போலே இந்தப்
பாரினில் பெற்றோர் நெஞ்சில்
படிந்திடு கவலை போக்கும்
சீரினைக் கொண்டாய் என்றன்
செந்தமிழ் போன்றாய் நீயே!
வாரிநான் அணைக்கச் சேய்நீ
வழங்கிடும் சுகந்தான் என்னே!

—ஆர். எஸ். சம்பந்தம்

★

15-11-54-ல் வெளிவருகிறது!

இலக்கியத்தில் காதல்

காரை முத்துப்புலவர் எழுதியது

விலை ரூ. ஒன்று

விவரங்களுக்கு:

அருணோதயம்
தியாகராயநகர் :: சென்னை-17.

எண்ணம்

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

லிக்குத் தந்து, தன் தேவைக்கு டில்லியிடம் கையேந்தி நிற்கிறது சென்னை அரசாங்கம்! இதனால், தன் அவசியத் தேவைகளை நிறைவேற்ற வகையின்றி, மக்களைப் பட்டினியால் மாளச் செய்து வருகின்றது! எங்கும் வறுமை, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம்! வடநாடோ, தென்னாட்டின் வருமானத்தால் கொட்டமடித்துக் கொழுத்து வருகிறது! "தேசபக்தி" "தேசீயம்" என்பன இந்தச் சூதை மறைக்கும் திரைகளாக இருந்து வருகின்றன!

நமது வருங்காலம், சென்னை மாகாணத் தமிழர் நிலையோடு இணைக்கப்படப் போவது நிச்சயம்! அப்போது நம் கடமை என்ன? வடநாட்டு ஏகாதிபத்தியப் பொன் விலங்கை உடைத்தெறியும் வலிமை, நம்நாட்டில் பிறகட்சிகளுக்கில்லை. திராவி இயக்கம் ஒன்றுதான், தெ னாட்டு மக்களின் கரங்களுக் விடுதலையளிப்பதாகும். ஆகவே வடநாட்டுக் கொள்ளையர்களிட மிருந்து நாம் விடுதலைபெற இங்குத் திராவிட இயக்கத்தை வலுப்பெறச் செய்யவேண்டும். அதன் மூலம் தலைமைக் கழகங்களோடு தொடர்பு கொண்டு, திராவிடநாட்டைப் பெற்று, சுதந்தர சமதர்மக் குடியாட்சியை நிலைபெறச் செய்யவேண்டும். அப்போதுதான், உலகின் முன் நாம் முழு விடுதலை பெற்ற மனிதராக - உரிமையுடையவர்களாக - இன்பவாழ்வு கொண்டவர்களாக இருக்கமுடியும். ஆகவே, அத்தகைய திராவிட ஆட்சி மலர்வதற்குப் பணிபுரிவோமாக!

திராவிடநாடு திராவிடர்க்கே!

நவம்பர் 27உ முதல்
கண்ணதாசன் எழுதும்

'ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி'

(சரித்திரத் தொடர்கதை)
"தென்றல்" இதழில் ஆரம்பமாகிறது.

பாண்டியநாடு தகப்பன் தரணி,
மலர்புரி தாய்நாடு
சோழநாடு வளர்ப்புத் தந்தையூர்,
இவ்வளவும் பெற்ற நடன ராணி............நாடோடியாகத்திரிந்தாள்! ஏன்?
கடைசியில் கலிங்க ராணியானாள்! எப்படி?
இதன் விளக்கமே

அறிஞர் அண்ணாவின்

கலிங்கராணி

விலை ரூ. 3—0—0

நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய

'பண்டைக் கிரேக்கம்'

விலை ரூ. 1-0-0.

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

தி. மு. க. அமைப்புக் கூட்டம்.

31-10-54 இரவு 8-மணிக்கு முசிரி வட்டம் தி.மு.க. அமைப்புக் கூட்டம் டி. கே. கும்பையா தலைமையில் கூடி 13 செயற்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

செயலாளர்: இ. ம. சுப்ரமணியம்
பொருளாளர்: செ. துரைசாமி
மாவட்ட பிரதிநிதி: ம. ச. நவநாதன்

தேர்ந்தெடுக்கப்பட்ட பின் திருச்சி பீடித் தொழிலாளர் தலைவர் ஜ. எம். ஷெரீப் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிக் கொள்கை விளக்கம் தந்தார்.

இரா. கி. மூர்த்தி-சென்னை 1

கலித்தொகை (119) 'அகன் ஞாலம்...மாங்கியோரே' என்னும் பாடலில் வரும்,' அந்தி அந்தணர் எதிர் கொள அயர்ந்து,' என்ற வரியும், ஐங்குறு நூற்றில் வரும், "பார்ப்பார் ஓதுக" என்ற வரியும். 'பட்டினப்பாலையில் வரும், "அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்' என்பதும் ஒப்புக்கொள்ளக் கூடியது தானா? சங்க காலத்திலேயே நம் திராவிடத்தில் ஆரியர் புகுந்து விட்டனரா?

"சிந்து நதிக்கரையில் திராவிட நாகரிகம் செழித்திருந்த காலத்திலேயே (கி. மு. 2000) ஆரியர்கள் அங்கு குடி யேறினர்" என, யாழ்ப்பாணம் இராமநாதப் பிள்ளை, 'உலகவரலாறு' என்னும் நூலில் கூறுகிறார். அப்போது தென் பகுதியாம் திராவிட பூமி தனி நாகரிகத்தோடு வாழ்ந்து வந்தது. சிந்துக்கரையில் குடியேறிய ஆரியர், திராவிடர் மீது அழுக்காறுற்று, பல முறைகளைப் புகுத்தினர் என்றும் இராமநாத பிள்ளை கூறுகிறார். பல ஆரியத் தலைவர்கள் உட்பட ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, வள்ளுவன் காலத்துக்கு சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரியர்கள் தென்னாட்டில் புகுந்தனர் என யூகிக்கலாம். ஆயினும் ஆரியர்தம் மடமைக் கொள்கைகள் திராவிடத்தின்அடிப்படைப் பண்புகளைச் சுலபத்தில் மாற்றமுடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஆரியப்பண்புகள் திராவிடரிடம் கலக்க ஆரம்பித்தன. ஆரிய முறைகலப்பினும், திராவிடப் பண் பாடு தனித்தன்மை யோடு இயங்கி வந்தது. சிலப்பதிகாரகாலத்திலும் சங்க இலக்கிய பார்ப்பனர்கள் செழிப்போடு-சூழ்ச்சியை முதலாக வைத்து-தென் நாட்டில் வாழ்ந்தனர். என் ஆராச்சியாளர்கள் குறிக்கின்றனர். இந்த நிலையிலும் சிலப்பதிகாரம் திங்களை, ஞாயிற்றை, மா மழையைப் போற்றித் துவங்கிய தேயன்றி 'விநயகர்துதி' கொண்டு துவங்கவில்லை. சங்க காலத்தில் ஆரியர் தென்னாட்டில் இருந்தனர் என்றும், கி. மு. 300-ம் ஆண்டிலேயே புகுந்து விட்டனர் என்றும், திராவிடனை எந்த வழியிலே ஏமாற்றலாம் என்பதை சிந்து நதிக்கரையில் பழகத் தெரிந்து வந்தனர் எனவும் யூகிக்கலாம். எனினும் குறள் உட்பட்ட சங்ககால இலக்கியங்களில் ஆரிய முறை முழுதும் புகாமல்-புக முடியாமல்-சில பகுதிகளில் புகுந்து நிற்கிறது. சங்க இலக்கியங்கள் ஆரியர் வருகைக்குப் பிற்பட்டவை தான்.

மு. இளமாறன் - மதுரை

"ஒருமைக் கட்டான் கற்ற கல்வி யொருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்னும் குறளுக்குப் புதுமைப் பொருள் தருக.

"ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வி, ஏழு பிறப்புக்கும் உதவும் தன்மையுடையதாகும்" என வரதராசனார் உள்ளிட்ட உரையாசிரியர்கள் உரை கூறியுள்ளனர். இது தவறு. 'ஒருமை' என்பது தனிமையைக் குறிப்பது. "தனிமையில், தான் கற்ற கல்வி ஒருவர்க்கு உயர்வையும் பலத்தையும், கொடுக்கக் கூடிய தன்மை வாய்ந்தது" எனப்பொருள் கொள்ளலாம். இது, குறளினின்று பிசகாத பொருள் தான். "எழுமையும் ஏமாப்பும் உடைத்து" என்பதில் 'உம்' எனும் அசைகெட்டு வரல் இலக்கணத்தில் உள்ள முறைதான்." மேலும், தனிமை, நிறைந்த சிந்தனைக்கு வழி வருகிறது என்பது பழந்தமிழ் முடிபு.

கா. சேக்தாவுது, மண்ணடி, சென்னை

அண்ணாவை உலக அறிஞர்களின் சிகரம் என்று கூறிப் புகழ்கிறீர்களே, அது தங்களுடைய பூஜாமனோபாவத்தைக் குறிக்க வில்லையா? பெரியாரை அதே நிலைக்குப் புகழ்ந்து, நாம் அடைந்த நிலையை எண்ணிப்பாரும், தோழரே!

தேன், இனிக்கிறது என்றும், மங்கை, காதலுக்குரியவள் என்றும் கூறுவதை, தேனிடத்தும் மங்கையிடத்தும் 'பூஜாமனோபாவம்' ஏற்பட்டு விட்டது என்று சொல்வது அறிவுடமையாகாது! உள்ளதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். மீண்டும் கூறுகிறேன்: "அந்தப் புகழுக்கு அண்ணா ஒருவரே தகுதி உடையவர்!" பெரியாரை நாம் புகழ்ந்த காலத்தில் அந்தப் புகழுக்கு அவர் உரியவராகத்தான் இருந்தார். பின்பு அவர் தவறி நடந்தது, நாம் புகழ்ந்ததால் அல்ல; புகழாவிடினும் அவர் தவறித்தான் இருப்பார்; உலர்ந்த போது மணம் கெட்டு விட்டதால், மலர்ந்தபோது மணம் விசியதை மறுக்க முடியுமா?

நாங்கள் தி. மு. கழகத்தின் பதிவு பெற்ற உறுப்பினரா?

ஆமாம்! ஆமாம்!

கே. எஸ். மதியரசு சேந்துறை

திருக்குறள், திருவள்ளுவரால், தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பட்டதா? அவ்வைப் பிராட்டியின் தயவால் அரங்கேற்றப்பட்டதா? இலக்கியத் சான்றுடன்பதில் தேவை.

திருக்குறள், சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது என்பதற்கு இலக்கியச் சான்று கிடையாது. எல்லாம் புராணச் சான்றுகளாகவே உள்ளன! அவ்வைப் பிராட்டியின் தயவால் அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவது, "சுண்டெலி இமயமலையைக் கொண்டு வந்துது" என்பது போலாகும்! வள்ளுவனோடு ஒப்பிட்டால், அவ்வை என்று சொல்லப் படுபவர் மிகவும் சாதாரணம்!

பி. நடராசன், பெருகளத்தூர்

"இராசமாணிக்கனார் முடிவே பூரணம் பெற்ற முடிவு" என்று எழுதியுள்ளீரே, அவர் செய்யும் எல்லா முடிவுகளுமா?

இல்லை தோழரே! இல்லை! 'தாலி முடிவு' மட்டும் தான் நான் கூறியது!

அண்ணாதுரை அறிஞரா?

[இப்படி ஒரு கேள்வியை மதுரையிலிருந்து, 'தமிழ்ப்பித்தன் என்னும் நண்பர் கேட்டார். 16-10-54உ இதழில் அதற்குப் பதில் கொடுத்திருந்தோம்- கவிதையில். அது கண்டு மகிழ்ந்த அதே நண்பர், மகிழ்ச்சியைக் கவிதையிலேயே தெரிவிக்கிறார்.]

அண்ணாதுரைக் கறிஞர் என்றே பட்டம்
ஆர் கொடுத்தார் எனக்கேட்டே தம்மை நானும்!
திண்ணார்ந்த வகைதனிலே பதிலை நீரும்
செப்பிவிட்டீர் அறிவுடையோர் ஒப்புமாறு!
மண்ணுலகில் அவர் அறிஞர்! ஆமாம் உண்மை!
மறுத்திடவே இல்லையதை என்றும் நான்தான்!
பண்பாடு தனிலவர்க்கு உள்ள நாட்டம்
படித்ததுண்டு பன்முறைதான் எனது வாழ்வில்!

'குமரிக்கோட் டங்கற்றேன் அங்கே நல்ல
கொள்கையும் தவழ்ந்து வரல் கண்டேன்; ஓர் நாள்
அமைந்தவொரு 'தாழ்ந்ததமி ழக'மும் கண்டேன்;
ஆங்குதமிழ் தாழ்ந்தநிலை யறிந்து நொந்தேன்!
'கம்பரசம்' பருகிட்டேன் எனினும் நானே
கடுகளவும் அவர் புலமை மறுத்தேன் அல்லேன்!
வம்பர் பலர் "அறிஞரா" என்று கேட்ட
வார்த்தையினை உமைக்கேட்டேன்' பதிலைக்காண!

தங்கள் பதில் கண்டிங்கே தருக்கர் எல்லாம்
தலை குனிந்து நிற்கின்றார்; கண்ட காட்சி!
சிங்கமென முழங்கும்அண் ணாவின் கொள்கை
சிந்தைக்கு விருந்தேதான் இனித்தல் கண்டேன்!
நிந்திப்பார் அவர் கொள்கை தன்னை என்றால்
நீசர்தாம் அவர்களென்றே கூறல் வேண்டும்!
சிந்தனைதான் ஏதுமில்லா விலங்கே யன்னார்'
சீராளர் அண்ணாவை உணரமாட்டார்!

"அண்ணாவின் பாதைவெகு நல்ல பாதை
அறிஞரெலாம் ஒப்பிடுவர் அதனை! ஆனால்
பண்பில்லாத்-தமிழகத்து-மக்கள் சில்லோர்
பாராட்ட மறுக்கின்றார்; அதுதான் கேடு!
ஏமாற்றி வாழந்துவரும் எத்தர் கூட்டம்
இல்லாமற் போக்கவவர் சொல்லும் பாதை
ஆமாம்என்(று) ஒப்பிவரின் தமிழர்க் கெல்லாம்
அரியதொரு நல்ல நாள விரைவில் உண்டு"

என்றுபகுத் தறிவாளர் யாரும் சொன்ன
எழில் மொழியைக் கேட்டேன் நான்; அன்பு கொண்டேன்!
நன்று நன்று அறிஞர் அண் ணாவின் பாதை!
நாமதனிற் கட்டாயம் நடத்தல் வேண்டும்!
என்றேதான் நிச்சயித்து விட்டேன் என்னும்!
எதிராளி தனக்குகந்த பதிலைக் கூற
அண்ணாவை "அறிஞரா? என்றே கேட்டேன்
அதுதவறு பேரறிஞர் அவர்தாள்! உண்மை!

—தமிழ்ப்பித்தன்

அப்பாவிக் கைதி!

கல்லக்குடிப் போரில் எங்களுக்கு கீழ்க்கோர்ட்டில்-ஒன்றரை ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டது. செஷன்ஸ் கோர்ட் அப்பீலிலும் நீதிபதி ராமன் நாயர், அந்தத் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார். மீண்டும் நாங்கள் சிறை புகுந்தோம். அப்போது நடந்தது இது:

திருச்சி மத்திய சிறையில், தண்டிக்கப் பட்டவர்களோடு, 'ரிமாண்'டில் வைக்கப்பட்டவர்களும் சேர்த்து வைக்கப்படுவது வழக்கம். 'ப்ளாக்' மட்டும் தனியாக இருக்கும். 'ரிமாண்டு' கைதிகள் பல ஊரைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். பல வெளியூர்களில் அவர்களது வழக்கு நடைபெறும். வழக்குத் தேதியன்று, சிறை அதிகாரி அவர்களை 'லோகல்' போலிஸாரிடம் ஒப்புவிப்பார். அவர்கள், கைதியைக் கொண்டுபோய், வழக்கு விசாரணை அன்றைய தினம் முடிந்ததும் கொண்டுவந்து சிறையில் ஒப்புவித்து விடுவார்கள். இப்படி ஒரு கைதிமீது, தஞ்சாவூரில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. தஞ்சாவூர் போலிஸார் வந்து அத்தக் கைதியை இட்டுச் சென்றார்கள். கோர்ட்டில் விசாரணை முடிந்ததும், போலீஸார் தஞ்சாவூர் பிளாட்பாரத்திற்கு அந்தக் கைதியை அழைத்து வந்தனர். பிளாட்பாரத்தல் கைதி 'டிமிக்கி' கொடுத்து ஓடிவிட்டான்! உடனே போலீஸார், அந்த பிளாட்பாரத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் பிடித்துக் கொண்டுவந்து சிறையில் ஒப்புவித்து விட்டுப் போயே போய் விட்டனர். உள்ளே வந்து புதுக்கைதி அழ ஆரம்பித்து விஷயங்களைச் சொன்னான். உடனே அங்க அடையாளங்களை ரிஜிஸ்டரோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் உண்மை புலனாயிற்று! சிறை அதிகாரிகள் உடனே போலீஸ் யார் என்று அறிய ஆரம்பித்தனர்!

(முடிவு தெரியவில்லை. நாங்கள் வெளியே வந்துவிட்டோம்.)

—கண்ணதாசன்

பத்திரிகைச் சிறுவன் கதை

ரோனேக் என்ற அமெரிக்கத் தீவில் கிரேலின்னி என்ற பாங்கி முதலாளி, தினந்தோறும் கிரிப் என்ற ஒருவனிடந் தான் தினசரிப் பத்திரிகை வாங்குவார். ஒரு நாள் பையனைக் காணேம். அவன் ஆஸ்பத்திரியில் இருப்பதாய் லின்னீன் அறிந்தார். உடனே, அவன் வேலையைத் தாமே மேற் கொண்டார். அவனுடைய பத்திரிகைகளைப் பல மளிகைக்கடைகளில் கொண்டுபோய்ப் போட்டார். கிரிப் ஆஸ்பத்திரியிலிருக்கும் விஷயத்தையும் அங்காங்கே போர்டுகளில் எழுதித் தொங்க விட்டார். வியாபாரம் அமோகமாய் நடந்தது.

கொஞ்ச காலத்தில் சிறுவன் திரும்பி வரவே, அவனிடம் லின்னீ தமது விற்பனைக் கணக்கை ஒப்புவித்தார்: 10,641 பிரதிகள் விற்பனை: வாங்கிய விலை 236 டாலர்; லாபம் 226 டாலர்! சிறுவன் 15-வருஷ காலம் வேலை செய்தால்தான் இந்த லாபம் அவனுக்குக் கிடைத்திருக்குமாம்.

ரயில்வே மூட்டைப்பூச்சி விஷயம்

சீமை ரயில்களில் ஒன்றில், ஜான் பிலிப்ஸ் என்ற ஒரு பத்திராசிரியர் பிரயாணம் செய்தார். மூட்டைப்பூச்சிக் கடி சகிக்க முடியவில்லை. உடனே, ரயில் அதிகாரிகளுக்கு மகா கடுமையாய் ஒரு கடிதம் எழுதினர்: "எனது தூக்கங் கெட்டதற்கு அதிகாரிகள் என்னிடம் மன்னிப்புக் கேட்பதோடு, என் டிக்கட் பணத்தையும் வாபஸ் செய்யவேண்டும்" என்று மிரட்டினர்.

பதில் வந்தது. மிக மரியாதையான பாஷையில் அது இருந்தது. "ஐயோ பாவம்! இப்பேர்ப்பட்ட மரியாதையான அதிகாரிகளைக் கண்டபடியெல்லாம் திட்டி எழுதிவிட்டோமே"! ஆசிரியர் வருந்தினர். தமது படபடப்புக்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டு, மற்றொரு கடிதம் எழுத எண்ணினர்.

தமது முதல் கடிதமும் தவறுதலாய் அதிகாரிகளின் கடித உறையில் திருப்பியனுப்பப்பட்டிருப்பதை இச்சமயம் கண்டார். அதைப் பிரித்தார். பின்புறத்தில், பென்ஸிலால் பெரிய அதிகாரி இவ்வாறு கிறுக்கியிருந்தார்: "இந்த ஆசாமிகளுக்கு மூட்டைப் பூச்சி கடிதத்தை அனுப்பவும்." விஷயம் எப்படி?

"ஒருவனுடைய உடைமைக்கும் அவனுடைய வாழ்வுக்குமிடையே பிடித்திருக்கும் துலாக்கோல்தான் அவனது களிப்பாகும்"—ஓர் ஆங்கில ஆசிரியர்.

★

மடீரா என்ற பிரபல தீவு ஒரு பசுந்தோட்டமாகும். அதன் அழகைக் காப்பாற்றுவதற்காக, அங்கே ஒரு சட்டம் இருந்து வருகிறது. அதாவது, ஒரு மரத்தை வெட்டுவோர், அந்த இடத்தில் மற்றொரு மரத்தைக் கட்டாயமாய் நட்டாக வேண்டும்.

★

அமெரிக்காவைக் கண்டுபிடித்தது யார் என்று கேட்டால், "கொலம்பஸ்" என்று பள்ளிக்கூடக் குழந்தைகள் அத்தனையும் சொல்லும். அப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறது இத்தனை காலமும். ஆனால், அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் அல்லவாம்! பிரெண்டன் என்ற ஓர் ஐரிஷ்காரரே அதைக் கண்டுபிடித்தவராம். ஓர் அமெரிக்கப் பத்திரிகையில் பல பழைய தஸ்தாவேஜி ஆதாரங்களோடு, இதை ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

★

ஒரு சபையில் நிலவிய அமைதியை ஓர் ஆசிரியர் பின்வருமாறு வர்ணிக்கிறார்: "அங்கே குண்டு வெடித்தால் கேட்கும்; அவ்வளவு நிசப்தம் குடி கொண்டிருந்தது."

★

ஒரு பிரபலஸ்தர் தமது மகளுக்கு எழுதிய கடிதம்: "உலகத்திலுள்ள ஜனங்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம: செயல் புரிபவர்கள் ஒரு கோஷ்டி; அந்த கௌரவத்தை அடித்துக்கொண்டு போகிறவர் மற்றொரு கோஷ்டி. முதல் கோஷ்டியில் சேரவே நீ முயலவேண்டும். ஏனெனில், அதில்தான் போட்டி மிகவும் சொற்பம்."

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. and Printed by U. Ramaswamy Bharathi Printers, 119, Broadway Madras-1.